THE "VAKIL"—TAMIL LAW MONTHLY FOR THE LAY PUBLIC

648

"வக்கீல்"

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 NOV 1951
MADRAS

648
4.51.

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

தமிழ் சட்டப் பத்திரிகை

(மாத வெளியீடு)

இந்த இதழில்

அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம்

'லெவி' கண்ட்ரோல்
லெவி'க் கண்ட்ரோல் உத்தரவுகள்

இன்று அமுலில் இருக்கும்
கட்டுப்பாடு உத்தரவுகள்

[illegible] வாடகைக் கட்டுப்பாடு
சட்டம்—புதிய திருத்தங்கள்
உள்பட

வழக்கும் - தீர்ப்பும்

கேள்வி பதில்

மற்ற விபரம் உள்ளே பார்க்கவும்

1714

THE MADRAS LAW JOURNAL BRANCH
TIRUVADIMARUDUR P.O.
Date..............
TIRUBUVANAM

THE "VAKIL" ~ ஜூலை-1951 ~ 4 அணா

நாகரீக நூதன பார்டர்களில்
கண்ணைக் கவரும்
மனோகரமான வேலைப்பாடுள்ள

பட்டு ஜவுளி தினுசுகள்

குறைந்த விலையில் கியாரண்டியுடன்
கிடைக்குமிடம்

ராணி ரெங்கய்யர் சன்ஸ்

கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு:—
20, லக்ஷ்மிபுரம் 2-வது தெரு,
மதுரை

பெங்களூர்
காஞ்சீபுரம்
கும்பகோணம்

பட்டுச் சேலைகள்
நூதன பார்டரில்
ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சுகள்:—
காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

"ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"

1 மண்டலம் (48 நாள்)
பூஜை செய்தும்
ஆயுள் பூராவும் பலன் தரும்
வெள்ளி ரக்ஷை
ரூ. 43—12—0

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள், தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். ஷ தொகை, வெள்ளி, விளம்பரம் தபால் செலவிற்குமாக தேவை. மீதி ரூ. 38-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N. B. (1) ஆர்டர் கிடைத்த 3-ம் நாள் ரக்ஷை பிரசாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளிநாட்டு பேர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். (3) V. P. கிடையாது. (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

கோட்டமருதூர்,
ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜ்யோதிஷ ஆபீஸ்,
சாகண்டகல்லூர் P. O. (S. A. Dt.)

"சக்தி ஆரூடம்"!

ஸ்ரீ K. R. அப்பாச்சாரியார் M.A.L.T. வைஸ் பிரின்ஸிபால், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, 27-6-50ல் எழுதுகிறார்.
"உங்கள் பலன்கள் முற்றிலும் பலித்தன என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

1 to 3 ஆரூட கேள்விகளுக்கு ரூ. 1.
3-க்கு மேல் கேள்வி 1க்கு அணா 8.
1 வருட பலன் ரூ. 5.
ஜாதகம் கணிக்க ரூ. 2.
சக்தி கவசம் ரூ. 7—8—0.
வி. பி. பி. தனி.
ஜாதகம் OR எழுதும் நேரம் தேவை.
N. B:—வெளி நாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ் முன் பணமாய் தேவை.

சக்தி ஹோம்,

விருத்தாசலம் P.O. (S.I.)

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர மாத சட்ட வெளியீடு

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G நாகராஜ பத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன, B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.
,, T. S வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, R கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, P. சுந்தரேசய்யர் B. A., B. L.,
,, V S விஜயராகவாச்சாரி, B. A., B. L., (ஆசிரியர்)

"வக்கீல்" சந்தா விபரம்

வருட சந்தா அதாவது 12 இதழ்களுக்கு மட்டில் } ரூ. 3—0—0

விசேஷ வருட சந்தா ரூ. 6—0—0

[12 இதழ்களுக்கும் அவைகளுக்கிடையே சப்ளிமெண்டுகளாக வெளியிடப்படும் "வக்கீல்" பிரசுரங்களுக்குமாக]

ஷை வெளிநாடு ... ... ரூ. 10—0—0

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

1. வருட சந்தாதாரர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் மட்டில் அனுப்பப்படும். விசேஷ வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 "வக்கீல்" மாத இதழ்களும் அவைகளுக்கிடையே சப்ளிமெண்டுகளாக வெளியிடப்படும் "வக்கீல்" பிரசுரங்கள் என்ற புத்தகங்களும் அனுப்பப்படும். ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. சாதாரணமாய் வி. பி. பி. கிடையாது.

2. சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:—

மானேஜர், "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26 :: கும்பகோணம்
(தென் இந்தியா)

என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

3. மணியார்டர் கூப்பனில் புரியும்படி ஒவ்வொரு எழுத்தாக—பெயர்; விலாசம்; தபாலாபீஸ்; ஜில்லா—இவைகளை எழுதவும்.

4. சிலோன் நேயர்கள் வி. பி. பி. மூலம் அனுப்பும்படி எழுதி ரூ. 6—7—0 செலுத்தி விசேஷ வருட சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

5. வெளிநாட்டிலிருந்து சந்தா தொகையை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்மூலம் அனுப்பலாம்.

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட
விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 3 ஜூலை 1951 இதழ் 7

பொருள் அடக்கம்

	பக்கம்
குறிப்புகளும் - செய்திகளும்	2
புதிய சட்டங்கள்	3
அரசியல் அமைப்பு (முதல் திருத்தம்)	7
கண்ட்ரோல்	
லெவி கண்ட்ரோல் உத்தரவு	8
உணவு தானியத் தீவிரக் கொள்முதல் உத்தரவு	11
இன்று அமுலில் இருக்கும் கண்ட்ரோல் உத்தரவுகள்	12
வழக்கும் - தீர்ப்பும்	14
ஜாகை - வாடகை கட்டுப்பாடு சட்டம்	17
கேள்வி - பதில்	23

"வக்கீல்" பிரசுரங்கள் (நெ. 3) "விற்பனை வரி" என்ற "வக்கீல்" சப்ளிமெண்ட் இம்மாதத்தில் விசேஷ சந்தாதாரர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
187709
சென்னை-600 008

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 3 | ஜூலை 1951 | இதழ் 7

குறிப்புகளும் - செய்திகளும்

அரசியல் அமைப்புச்சட்டத் திருத்தம்: இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தால் மக்களுக்கு அளிக்கப்பட்ட ஜீவாதார உரிமைகள் பலவற்றைப் பாதுகாக்கும் முறையில் நமது சுப்ரீம் கோர்ட்டும், இந்தியாவிலுள்ள பல ஹைகோர்ட்டுகளும், சில சட்டங்கள் செல்லா என்றும், சர்க்கார்களால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் பல செல்லா என்றும் தீர்ப்பளித்து வந்திருப்பதை நேயர்கள் கவனித்திருப்பார்கள். ஆனல் அரசியல் அமைப்புச் சட்டத்தின் சில ஷரத்துக்களையே இப்பொழுது "பார்லிமெண்ட்" திருத்தி அமைத்திருக்கிறபடியால், அது சம்பந்தமான உயர்நீதி மன்றங்களின் அபிப்பிராயங்களும் தீர்ப்புகளும் வலுவிழந்துவிடும். ஜீவாதார உரிமைகளில் இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கும் மாறுதல்கள் எவை என்பது இந்த இதழில் வேறு இடத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாயும் ஒரு மகத்தான சட்ட பிரச்னையும் கிளம்பி இருக்கின்றது. அரசியல் அமைப்பைப் பார்லிமெண்டின் இருசபைகளும் ஜனாதிபதி அவர்களும் சேர்ந்துதான் திருத்தக் கூடும். அவ்விதமான பார்லிமெண்ட் இன்னும் அமைக்கப்படவில்லை. ஆனல் இப்பொழுது இருக்கும் மாஜி அரசியல் நிர்ணய சபையே இரண்டு சபைகளின் அதிகாரத்தையும் தேர்தல் முடியும் வரை தாற்காலிகமாகச் செய்து கொண்டிருக்க மட்டில் தான் அதிகாரமுள்ளது. இச்சபை அரசியல் அமைப்பையே திருத்த முடியுமா என்ற பிரச்னையில் சட்ட நிபுணர்கள் இரண்டு கட்சிகளாகப் பிரிந்திருக்கின்றனர். சுப்ரீம் கோர்ட்டில் மனுக்களும் போடப்பட்டிருக்கிறதாகச் செய்திகள் பிரசுரமாகி இருக்கின்றன. இதிலும் சுப்ரீம் கோர்ட்டின் அபிப்பிராயமே முடிவானதாகும்.

* * * *

மேல்கோர்ட்டுகளின் அதிகார வரம்பு: அரசியல் அமைப்புச்சட்டம் வந்தபிறகு சிவில் கிரிமினல் வழக்குகளில் கட்சிக்காரர்களாக மாட்டிக் கொண்டவர்கள் எப்படியாவது தப்பி ஓட, "இந்தச் சட்டம் செல்லாது"—"அந்தச் சட்டம் செல்லாது" என்று எல்லாக் கோர்ட்டுகளிலும் கட்சி சொல்லி வந்தனர். இப்பொழுதும் அக்கட்சி சொல்லலாம். ஒன்றும் தடை இல்லை. ஆனல் ஹைகோர்ட்டுக்குக் கீழ் இருக்கும் எந்தக் கோர்ட்டும் இனி தம் சொந்த அபிப்பிராயத்தைத் தழுவி ஒரு சட்டம் செல்லாதென்று தீர்ப்புச் சொல்லமுடியாது. அவர்கள் அப்படி அபிப்பிராயப்பட்டாலும் அது விபரத்தை ஹைகோர்ட்டுக்கு எழுதி ஹைகோர்ட்டார் கொடுக்கும் அபிப்பிராயப்படியேதான் தீர்ப்புச் சொல்லவேண்டும். இதற்காக, சிவில் கிரிமினல் வழக்குமுறைச் சட்டத்தைத் திருத்தும் ஒரு மத்திய சட்டம் இயற்றப்பட்டிருப்பதை இந்த இதழில் கவனிக்கவும்.

* * * *

புகை பிடிப்பவர்கள்: ஜீவாதார உரிமைகள் எப்படி இருந்தாலும், சிகரெட், பீடி, சுருட்டு பிடித்துக் கொண்டே பழக்கப்பட்ட நேயர்கள் ஒரு உரிமையை இழந்துவிட்டார்கள். இவர்கள் சினிமாக் கொட்டகையில் இனி புகை பிடிப்பது குற்றமாகும். இவர்களைக் கொட்டகையை விட்டு அகற்ற எந்தப் போலீஸ்காரருக்கும் ஒரு சென்னைச் சட்டத்தால்

அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. வெளியேற்றப்பட்ட இவர்களுக்கு டிக்கட் பணமும் வாபஸ் கொடுக்கமாட்டார்கள். அவ்வித நேயர்கள் அடுத்த தடவை சினிமா பார்க்கப் போவதற்குள் இந்த இதழில் விளக்கப்பட்டிருக்கும் அச்சட்டத்தைப் படித்து வைத்துக் கொள்ளவும்.

* * * *

கொள்முதல்: உணவு தானியக் கொள்முதல் சம்பந்தமாய், சென்னைச் சர்க்காரின் புதிய கொள்கைகளைத் தழுவி, இரண்டு கண்ட்ரோல் உத்தரவுகள் சமீபத்தில் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இனி சில ஜில்லாக்களில் தீவிரக் கொள்முதல் நடவாது. தீவிரக் கொள்முதல் உத்தரவு தமிழ் நாட்டில் தஞ்சை ஜில்லா பூராவிலும் நீலகிரி ஜில்லா பூராவிலும் தான் அமுலில் இருக்கும். செங்கல்பட்டு, வட ஆற்காடு, மதுரை, திருச்சி இந்த ஜில்லாக்களில் சில சில குறிப்பிட்ட இடங்களில் பட்டில் கரார்க் கொள்முதல் என்ற "லெவி" க்கொள்முதல் உத்தரவு அமுலில் இருக்கும். இவை இரண்டின் விபரமும் வித்தியாசமும் இந்த இதழில் விளக்கப்பட்டிருப்பதை நிலச்சுவான்தார்களும் குத்தகை அல்லது சாகுபடிக்காரர்களும் அவசியம் கவனிக்கவேண்டும்.

* * * *

கண்ட்ரோல் உத்தரவுகள்: கண்ட்ரோல் உத்தரவுகள் வந்து கொண்டே இருக்கின்றன; ரத்தாகிக் கொண்டே இருக்கின்றன என்று அலுத்துக்கொள்ளும் நேயர்கள் இந்த இதழில் "இன்று அமுலில் இருக்கும் கண்ட்ரோல் உத்தரவுகள்" என்ற தலைப்பில் இருக்கும் விஷயங்களைப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

* * * *

வரதட்சிணைத் தடை மசோதா: இன்னும் 'பாசாகாத' சட்டங்களைப்பற்றி ஒருவரும் பயப்படவேண்டியதில்லை. முக்கியமாக வரதட்சிணை வாங்கினால் 6 மாதம் வரை சிறைத் தண்டனை விதிக்கும் பார்லிமெண்ட் மசோதாவைக் கண்டு மணமகன்களோ அவர்களின் பெற்றோர்களோ பயப்படக் கொஞ்சங்கூட இடமில்லை. இவ்வித மசோதாக்கள் அடிக்கடி பிரசுரமாகிக் கொண்டுதான் வரும். அவர்கள் பேரத்தைத் திடீரென்று நிறுத்தவோ, ரகசியமாகச் செய்து கொள்ளவோ இன்னும் அவசியம் ஏற்படவில்லை. இச்சட்டம் "உலையில்" தான் இருக்கிறது.

புதிய சட்டங்கள்

சுருக்கியும்-வரிசையாகவும்

1951 ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்டவை. பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்குமுன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன.]

16. குறைந்தபட்ச சம்பளத் திருத்தச் சட்டம்-The Minimum Wages Amendment Act 1951 (23-4-1951). 1948 ஆம் வருடக் குறைந்த பட்ச சம்பளச் சட்டத்தின் முதல் பாகத்தில் கண்ட தொழிலாளர்களுக்கு 31-3-1952க்கு முன்பும்; இரண்டாவது பாகத்தில் கண்ட தொழிலாளர்களுக்கு 31-12-1953க்கு முன்பும், ஒவ்வொரு வகைத் தொழிலாளருக்கும் குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயம் செய்யவேண்டுமென்று அச்சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் தொழிலாளர்களைத் தவிர, சர்க்காரால் குறிப்பிடப்படும் தொழில்களில் வேலை செய்பவர்களுக்கு, எந்தத் தேதிக்குள் குறைந்த பட்சச் சம்பளம் நிர்ணயம் செய்யப்படுமென்று அந்தந்தச் சர்க்கார் அறிக்கையிலேயே குறிப்பிடவேண்டும் என்றும் அச்சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. (குறைந்தபட்சச் சம்பளச் சட்டம் "வக்கீல்" 1951 ஜனவரி இதழ்-பக்கம் 18 ல் விளக்கப்பட்டிருக்கிறது.)

17. நிலக்கரிச் சுரங்க பந்தோபஸ்துச் சட்டத் திருத்தம்-The Coal Mines Safety (Stowing) Amendment Act 1951 (25-4-1951).

18. சுப்ரீம் கோர்ட் அட்வகேட் சட்டம்-The Supreme Court Advocates—Practice in High Courts—Act 1951

(28-4-1951) சுப்ரீம் கோர்ட் அட்வகேட்களாகப் பதிவு செய்துகொண்டிருக்கும் வக்கீல்கள் காஷ்மீர் தவிர இந்தியாவிலுள்ள எல்லா ஹைகோர்ட்டுகளிலும் ஆஜராக உரிமை கொடுக்கும் சட்டம். ஆனால் ஏற்கனவே ஒரு ஹைகோர்ட்டின் ஜட்ஜாக இருந்து அந்தக் கோர்ட்டில் வக்கீலாக ஆஜராவதில்லை என்று வாக்கு தத்தம் கொடுத்து இப்பொழுது சுப்ரீம் கோர்ட் வக்கீல்களாக இருப்பவர்களுக்கு அந்த ஹைகோர்ட்டில் ஆஜராக உரிமை இல்லை.

19 சிவில் வழக்கு முறைச் சட்டத் திருத்தம்-The Code of Civil Procedure Second Amendment Act 1951 (28-4-1951). பாகிஸ்தானில் வசிக்கும் பிரதிவாதிக்கு இந்தியாவிலிருந்து எப்படிச் சம்மன் அனுப்புவது என்பதுபற்றி. பிரதிவாதி வசிக்கும் இடத்திற்கான கோர்ட்டு மூலம் (ஹைகோர்ட் அல்லாத கோர்ட் மூலம்) சம்மனை அனுப்பலாமென்று சட்டத்தில்சேர்க்கப்பட்டிருக்கிறது. அங்கே சர்க்கார் அல்லது ரயில் உத்தியோகத்தில் இருக்கும் பிரதிவாதிகளுக்கு மத்திய சர்க்காரால் குறிப்பிடப்படும் அதிகாரி மூலம் சம்மனை அனுப்பலாம். இந்தத் திருத்த விதி மத்திய சர்க்காரால் குறிப்பிடப்படும் தேதி முதல்தான் அமுலுக்கு வரும்.

20. இந்தியத் தீர்வைச் சட்டத் திருத்தம் - The Indian Tariff - Second Amendment - Act 1951 (28-4-1951.)

21. நிலக்கரிச் சுரங்க - பிராவிடண்ட் பண்ட் போனஸ் திட்டத் திருத்தச் சட்டம் - The Coal Mines Provident Fund and Bonus Schemes Amendment Act 1951 (28-4-1951).

22. பாகிஸ்தானுக்குக் குடி பெயர்ந்தவர்கள் சொத்து நிர்வாகச் சட்டத் திருத்தம் - The Administration of Evacuee Property - Amendment Act 1951. (28-4-1951). இச்சட்டப்படி 'கஸ்டோடிய'னிடம் இருக்கும் சொத்துக்களைக் கோர்ட் மூலம் ஜப்தி செய்ய முடியாது. ஏற்கனவே கோர்ட்டால் இச்சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டிருந்தாலும், அவைகளுக்கு ரிசீவர் நியமிக்கப்பட்டிருந்தாலும், இவை சம்பந்தமாய்த் தடை உத்தரவுகள் ஏற்பட்டிருந்தாலும் இவை இச்சட்டத்தால் ரத்தாகிவிடும். 1-3-1947 க்குப்பின் இவ்விதமான சொத்துக்கள் கோர்ட் ஏலம் போயிருந்தாலும் வேறு அதிகாரிகளால் விற்கப்பட்டிருந்தாலும் இவ்வித ஏலம் அல்லது விற்பனையை ரத்துச் செய்ய வேண்டுமென்று 'கஸ்டோடியன்' 17-10-1950க்குள் உத்தரவு கொடுத்திருந்தால் அவை ரத்தாகிவிடும்.—என்று செக்ஷன் 17 புதிதாக திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் தலைமை ஆபீசுள்ள ஒரு லிமிடெட் கம்பெனியின் பங்குதார்களில் 51 சதவிகிதம் பாத்தியமுள்ள பங்குதார்கள் பாகிஸ்தான் போய்விட்டாலும் அக்கம்பெனி 'குடிபெயர்ந்த'தாகப் (Evacuee) பாவிக்கப்படும்.

23. இந்திய நிதிச்சட்டம்-The Finance Act 1951 (26-4-1951). 1-4-1951 முதல் ஆரம்பமாகும் நிதி வருடத்தில் சர்க்கார் செலவுகளுக்குத் தேவையான பணத்தை அடைய, வருமான வரிச்சட்டம், இந்தியத் தீர்வைச் சட்டம், மத்திய சுங்கவரி உப்புச் சட்டம், இவைகள் திருத்தப்பட்டு, புதிய வரி விகிதங்கள் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன. வருமான வரியைப்பற்றிய புதிய விகிதங்கள் சென்ற மாத இதழில் விவரிக்கப்பட்டது.

24. சிவில், கிரிமினல், வழக்கு முறைச் சட்டத் திருத்தம் - The Codes of Civil and Criminal Procedure Amendment Act 1951: கீழ்க் கோர்ட்டுகள் ஒரு சிவில் அல்லது கிரிமினல் வழக்கை விசாரிக்கும்போது, எந்தச் சட்டமாவது செல்லுமா செல்லாதா என்ற பிரச்னை ஏற்பட்டு, அது செல்லாதென்று அவ்வழக்கை விசாரிக்கும் நீதிபதிக்குத் தோன்றி, அவர் சம்பந்தப்பட்ட ஹைகோர்ட்டாலோ சுப்ரீம் கோர்ட்டாலோ அச்சட்டம் செல்லாதென்று யாதொரு தீர்ப்பும் அளிக்கப்படாமலிருக்கும் நிலைமையில், அவ்வழக்கை விசாரிக்கும் எந்தக் கீழ்க்கோர்ட் நீதிபதியும் தாமே ஒன்றும் அபிப்பிராயம் சொல்ல இனி

முடியாது. அச்சந்தர்ப்பத்தில் வழக்கை விசாரிக்கும் கீழ்க்கோர்ட் நீதிபதி அவ்வழக்கையும் தம் அபிப்பிராயத்தையும் ஹைகோர்ட்டுக்கு எழுதவேண்டும். அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் சட்டம் செல்லுமா செல்லாதா என்று ஹைகோர்ட்தான் தீர்ப்புச் சொல்லவேண்டும். அதாவது இனி ஒரு சட்டம் செல்லாது என்று, எந்தக் கீழ்க் கோர்ட்டுகளும் சொல்ல முடியாது. (குறிப்பு:—இது 'சட்டம், அவசரச் சட்டம், ரெகுலேஷன்' என்பனவகளைப் பற்றித்தான். ஒரு சட்டத்தை அனுசரித்து சர்க்கார் அல்லது வேறு அதிகாரிகளால் செய்யப்படும் விதிகள் உத்தரவுகள் முதலியவைபற்றி கீழ்க் கோர்ட்டுகள் தங்கள் அபிப்பிராயத்தை அனுசரித்துத் தீர்ப்பு சொல்லக்கூடிய சுதந்தரம் இச்சட்டத்தால் பாதிக்கப்படவில்லை. ஆசிரியர்—'வ.')

25. ஜலியன்வாலா பாக்—தேசிய ஞாபகச் சின்னச் சட்டம். The Jallianwala Bagh National Memorial Act 1951 (1-5-1951) 'பஞ்சாப் படுகொலை'யில் உயிர் துறந்தவர்களைப்பற்றி ஒரு தேசிய ஞாபகச் சின்னம் ஏற்படுத்தும் சட்டம். பாஞ்சாலத்தைச் சேர்ந்த அமிருத சரஸ் என்ற பட்டணத்திலுள்ள 'ஜலியன்வாலா பாக்' என்ற இடத்தில் 13-4-1919 அன்று தினம் ஜெனரல் டயர் என்ற ஓர் ஆங்கிலேய வெறியனால் காரணமில்லாமல் சுட்டுக் கொல்லப்பட்ட இந்தியர்களின் ஞாபகார்த்தமாய், அவ்விடத்தையும் சுற்றுப்புறமுள்ள இடத்தையும் ஒரு தேசியச் சொத்தாகவும் ஞாபகச் சின்னமாகவும் ஏற்படுத்தும் சட்டம். அச்சொத்துக்களை நிர்வாகம் செய்ய தர்மகர்த்தாக்கள் சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் திரு. ஜவஹர்லால் நேரு, கிச்லூ, மௌலானா அபுல்கலாம் அஸாத், இந்திய காங்கிரஸ் தலைவர், பஞ்சாப் கவர்னர், பஞ்சாப் முதல் மந்திரி இவர்களும் மத்திய சர்க்காரால் நியமிக்கப்படும் மூன்று அங்கத்தினர்களும் இருப்பார்கள். இவர்கள் ஜலியன்வாலாபாக் சொத்துக்களையும் பணங்களையும் நிர்வாகம் செய்து இந்தத் தேசிய ஸ்தாபனத்தைக் காப்பாற்றுவார்கள். இது பற்றிப் பல விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

26 உள்நாட்டுக் கப்பல்கள் திருத்தச் சட்டம். The Inland Steam—Vessels Amendment Act 1951. (4-5-1951) உள் நாட்டுக் கப்பல்களைப் பதிவு செய்துகொள்ளும் விஷயமாயும் இவைகள் கப்பல் பிரயாணம் செய்யும் விஷயமாயும் 1917 ஆம் வருடச் சட்டத்தில் பல விதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

27. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத் திருத்தம். The Repre entation of the People Amendment Act 1951 (5-5-1951) 1950ஆம் வருடத்திய 43 ஆவது சட்டத்தில் 'ஸி' பாக ராஜ்யங்களான டில்லி இமாசலப் பிரதேசம், விந்தியப் பிரதேசம் இந்த ராஜ்யங்களிலிருந்து இந்தியப் பார்லிமெண்டின் மக்கள் சபைக்கு ஒரு அங்கத்தினர் ஸ்தானம் 'ஷெட்யூல் வகுப்பினரு'க்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. மணிபூர், விந்தியப் பிரதேசம் இந்த இடங்களிலிருந்து ஷை சபைக்கு ஒரு ஸ்தானம் 'ஷெட்யூல் ட்ரைப்' வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

28. பத்திரிகைகள் விற்பனை விளம்பர வரி ரத்துச் சட்டம். The Tax on News papers—Sales and Advertisements—Repeal Act 1951. (5-5-1951) சென்னையில் பத்திரிகைகளுக்கு விற்பனை வரி விதிப்பது 1-1-1951 முதலும் பம்பாயில் பத்திரிகை விளம்பரங்களுக்கு வரி விதிப்பது 1-4-1951 முதலும், இந்த மத்திய சட்டத்தால் ரத்து செய்யப்பட்டன.

29. விசுவ பாரதி சர்வ கலாசாலைச் சட்டம். The Vishva — Bharati Act 1951 (9-5-1951) வங்காளத்திலுள்ள 'சாந்தி நிகேதன்' என்ற இடத்தில் காலம் சென்ற ரவீந்திரநாத் டாகூரால் ஸ்தாபிக்கப்பட்ட 'விசுவபாரதி' என்ற கல்வி ஸ்தாபனத்தை ஒரு தேசிய ஸ்தாபனமாகவும் ஒரு பல்கலைக் கழகமாகவும் ஏற்படுத்தும் சட்டம்.

30. ஜனாதிபதி பென்ஷன் சட்டம் The President's Pension Act 1951 (13-5-1951) இச்சட்டப்படி இந்திய ஜனாதிபதிகளாக இருப்பவர்கள் பதவிக் காலம் முடிந்த பிறகு அவர்கள் ஆயுள் வரை வருடம் ஒன்றுக்கு ரூ. 15,000 உபகாரச் சம்பளம்

(பென்ஷன்) பெறுவார்கள். கடைசியாக கவர்னர் - ஜெனரல் பதவி வகித்தவருக்கும் அதே பென்ஷன் உண்டு.

32. ரிசர்வ் பாங்கி சட்டத் திருத்தம் The Reserve Bank of India Amendment Act 1951 (15-5-1951) இச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

33. நிதிக் கமிஷன் சட்டம் Finance Commission Miscellaneous Provisions Act 1951 (16-5-1951) இந்திய அரசியல் சட்டத்தின் 280 ஆவது ஆர்டிகிள்படி ஜனாதிபதி அவர்கள் நியமிக்கவேண்டிய நிதிக்கமிஷனின் அங்கத்தினர்களின் யோக்கியதாம்சங்களை நிர்ணயிப்பது.

1951 ஆம் வருடத்திய (சென்னை) சட்டங்கள்

[சென்னைச்சட்ட மன்றத்தால் நிறைவேற்றப் பட்டவை. சட்டம் சென்னை - சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குமுன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

பிழையும் திருத்தமும்:—1951 ஜூன் "வக்கீல்" இதழில் இப்பகுதியில் 4ஆவது சட்டத்திற்குப்பிறகு "**5. துங்கபத்திரா அணைக்கட்டு நிலப்பேரச் சட்டத் திருத்தம் (17-4-1951)**" என்று சேர்த்துக் கொண்டு, 5, 6, 7 என்று எண்ணிக்கைகள் கொடுத்திருக்கும் சட்டங்களை முறையே 6, 7, 8 என்று திருத்தி வாசிக்கவும்.

9. சென்னை வாடகை வண்டிச் சட்டத் திருத்தம். Madras Hackney Carriage Amendment Act 1951 (22-5-1951). ராஜ்ய சர்க்காருக்குச் சொந்தமான வாடகை வண்டிகள் இச்சட்டத்திற்குள் வராதென்று சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

10. காட்டுயானை பாதுகாப்புச் சட்டத் திருத்தம். (Madras wild Elephants Preservation Amendment Act 1951 22-5-1951.)

11. "பார்ஸ்டல்" ஸ்கூல் சட்டத் திருத்தம். Madras Borstal Schools Amendment Act 1951 (25-5-1951) பாலிய வயதுள்ள குற்றவாளிகளைக் குறித்த சட்டத் திருத்தம்.

12. சென்னை கிராமப் பஞ்சாயத்துச் சட்டத்திருத்தம். The Madras Village Panchayats Amendment Act 1951 (22-5-1951) சர்க்காரால் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய மான்யங்களைப்பற்றிய திருத்தம்.

13. சினிமாக் கொட்டகையில் புகை பிடிப்பதைத் தடுக்க, சட்டத் திருத்தம். The Madras City Police and Places of Public Resort Amendment Act 1951 (22-5-1951): சென்னை சிடி போலீஸ (1888) சட்டத்தில் செக்ஷன் 40 A என்று ஒரு புது செக்ஷனும்; மற்ற இடங்களில் அமுலில் இருக்கும் பொதுஜனங்கள் கூடுமிடங்களைக் குறித்த (1888) சட்டத்தில் (Places of Public Resort Act 1888) செக்ஷன் 12 A என்று அதே விஷயம் அடங்கிய ஒரு புது செக்ஷனும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப் புதிய செக்ஷன்களின்படி:-பொது மக்கள் காசு கொடுத்தோ இனாமாகவோ பார்க்கும் சினிமா, டிராமா, நடனம் உட்பட எவ்வித வேடிக்கை பார்க்கும் கொட்டகை அல்லது கட்டடத்தில், காட்சி ஆரம்பிக்க அரை மணி முன்னிருந்து கடைசி வரையில் ஒருவரும் புகை பிடிக்கக் கூடாது. காட்சி மேடையிலும் சரி, பொது மக்கள் இருக்கும் இடங்களிலும் சரி, எவரும் புகை பிடிப்பது குற்றமாகும். இந்த உத்தரவை மீறிப் புகைபிடிப்பவர்களை எந்தப் போலீஸ் அதிகாரியும் உடனடியாகக் கொட்டகையிலிருந்து அப்புறப்படுத்தலாம். தவிர, அவர் மீது கிரிமினல் வழக்கும் தொடரப்பட்டால் ரூ. 50 வரை அபராதமும் விதிக்கப்படலாம். வெளியேற்றப் பட்டவர் கொடுத்த டிக்கட் பணத்தையும் வாபீஸ் கேட்கமுடியாது; வேறு நஷ்டஈடும் அவர் கேட்கமுடியாது. பொதுவாகவோ, குறிப்பாகவோ, எந்த எந்த மணி நேரங்களுக்குள் நடக்கும் காட்சிகளில்தான் மேலேகண்டபடி ஒருவரும் புகைபிடிக்கக் கூடாதென்ற தடை இருக்கவேண்டுமென்று சர்க்கார் உத்தரவு பிறப்பிப்பார்கள். அந்த நேரத்தில் நடக்கும் காட்சிகளில்தான் முன் சொன்னபடி ஒருவரும் புகைப்பிடிக்கக்கூடாது. மேலும் எந்த வகையான காட்சிகளுக்கும் விதிவிலக்களிக்கச் சர்க்காருக்கு அதிகாரமுண்டு. டிராமா அல்லது வேறு காட்சிகளில் அக்காட்சியின் ஒரு பாகமாகப் புகை பிடிக்கவேண்டிய இடம் அல்லது கட்டம் இருந்தால் அதில் பட்டியல் புகைபிடிக்கலாம்.

14. உபயோகமற்ற சட்ட ரத்து திருத்தச் சட்டம். Madras Repealing and Amending Act 1951 (22-5-1951) சில உபயோகமற்ற பழைய சட்டங்கள் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன.

அரசியல் அமைப்பு (முதல்) திருத்தம்

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஜீவாதார உரிமைகளைப் பற்றிய சில ஷரத்துக்கள் இந்திய யூனியன் பார்லிமெண்டால் திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன. 18-6-1951ல் இது ஜனாதிபதி அவர்களின் அங்கிகாரம்பெற்று அன்று முதல் அமுலுக்கு வந்துவிட்டது. இத் திருத்தத்தின் முக்கிய அம்சங்கள்:—

(1) **"சமத்துவ உரிமை"** இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 15 என்பது 'சமத்துவம்' என்ற ஜீவாதார உரிமையைப் பற்றியது. இந்திய மக்களுக்குள் மதம், இனம், ஜாதி, ஆண் பெண் வேற்றுமை, பிறப்பிடம் இவை காரணமாக அரசாங்கம் எவரையும் எவ்வித தடை அல்லது நிபந்தனைக்குட்படுத்தக் கூடாதென்றும், முக்கியமாக எவரும் கடைகள், பொது உணவு விடுதிகள், ஹோட்டல்கள், பொது கேளிக்கை ஸ்தலங்கள், அரசாங்கப் பணத்தாலோ அதன் உதவியைக் கொண்டோ பராமரிக்கப்படும் கிணறுகள், குளங்கள், குளிக்கும் துறைகள், ரஸ்தாக்கள், பொதுமக்கள் கூடுமிடங்கள் இவைகளுக்குத் தாராளமாய் போய்வருவதை எந்த அரசாங்கமும், சட்ட திட்டங்களும் தடுக்கவும், நிபந்தனைகளுக்குட்படுத்தவும் கூடாது என்றும் ஆனால் ஸ்திரீகள் குழந்தைகள் விஷயமாய் மட்டில் விசேஷ வசதிகள் செய்யப்படலாமென்றும் இருக்கிறது. ஆர்டிகிள் 29(2) என்பதில்-சர்க்காரால் நடத்தப்படும் கல்வி ஸ்தாபனங்களிலோ, சர்க்கார் உதவியைக் கொண்டு நடத்தப்படும் கல்வி ஸ்தாபனங்களிலோ, எந்த இந்தியப் பிரஜையையும், அவருடைய மதம், இனம், ஜாதி, பாஷை இவை காரணமாக அந்த ஸ்தாபனத்தில் சேர்த்துக்கொள்ள மறுக்கக் கூடாது என்று இருக்கிறது.

மேற்கண்ட ஆர்டிகிள் 15, ஆர்டிகிள் 29(2) இரண்டுக்கும் இப்பொழுது ஒரு ஷரா சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது:—"சமூகத்திலோ, கல்வியிலோ பிற்போக்கான வகுப்பினருக்கும் (Socially and Educationally backward classes of citizens) "ஜாப்தா"வில் கண்ட ஜாதியினருக்கும் (Scheduled castes) "ஜாப்தா"வில் கண்ட மலை ஜாதியினருக்கும் (Scheduled Tribes) சர்க்கார் விசேஷ வசதிகள் செய்து கொடுப்பதை இது (ஆர்டிகிள் 15ல் இருப்பதும் ஆர்டிகிள் 29(2)ல் இருப்பதும்) தடுக்காது,—என்ற ஷரா சேர்க்கப்பட்டிருக்கிறது.

(2) **"பேச்சு எழுத்து சுதந்தரம்"** ஆர்டிகிள் 19ல் பேச்சு-எழுத்து சுதந்தரம் என்ற ஜீவாதார உரிமையைப்பற்றிய ஷரத்து மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. இச் சுதந்தரத்தை மறுத்தோ குறைத்தோ செய்யப்படும் சட்டங்கள் செல்லா என்றும் ஆனால் சில விதி விலக்குகள் மட்டில் உண்டென்றும் இருந்தது. அதாவது தூஷணை, அவதூறு, மானக்கேடு விளைவித்தல், நீதி ஸ்தலங்களை அவமதிப்பது ஒழுக்கம் நன்னடத்தை இவைகளுக்குக் கேடு விளைவித்தல், ராஜ்யத்திற்கு வீழ்ச்சியோ ஆபத்தோ விளைவிப்பது இவ்விஷயங்கள் சம்பந்தமாய்மட்டில் சட்டங்கள் ஏற்படுத்தி பேச்சு-எழுத்து சுதந்தரத்தை ஒரு வரம்புக்குள் கொண்டுவரலாமென்று ஆர்டிகிள் 19 (2)ல் இருந்தது. இப்பொழுது ஏற்பட்ட திருத்தத்தால் மேற்கண்ட விஷயங்களைத் தவிர (1) அன்னிய தேசங்களுடன் நமக்குள்ள நேசத்தன்மையைக் காப்பாற்றவும், (2) பொதுஜன அமைதியை நிலவச் செய்யவும் (3) குற்றங்கள் செய்யும்படி தூண்டுவதைத் தடுக்கவும்-கூட பேச்சு-எழுத்து சுதந்தர விஷயத்தில் நிபந்தனைகள் செய்து ஒரு வரம்புக்குள் கொண்டுவரும் சட்ட திட்டங்களும் செல்லுமென்று சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்படி சேர்க்கப்பட்ட ஷரத்து 26-1-1950 முதலிலேயே இருப்பதாகவும் பாவிக்கப்படும்.

(3) **"தொழில் சுதந்தரம்"** தொழில் சுதந்தரத்தைப் பற்றிய ஆர்டிகிள் 19 (6)ல்—சர்க்காரே ஒரு தொழில் அல்லது வியாபாரத்தில் நேர்முகமாக ஈடுபட்டு நடத்தினாலும், மேற்பார்வையில் வைத்துக் கொண்டிருந்தாலும் அதற்காகவும் பொதுமக்களின் தொழில் சுதந்தரத்தை மறுத்தோ, குறைத்தோ சட்ட திட்டங்கள் செய்யலாம் என்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

(4) **"சொத்து உரிமை"** சொத்து உரிமை சம்பந்தமான ஜீவாதார உரிமையைப் பற்றி புதிதாக ஆர்டிகள் 31A என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. இதன்படி ஜமீன் இனும் முதலிய "எஸ்டேட்" ஒழிப்பு சம்பந்தமான சட்டங்கள் எல்லாம் சொத்துரிமையைப் பறித்தாலும் இவை மட்டில் செல்லும் என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. சில குறிப்பிட்ட சட்டங்கள் (சென்னை ஜமீன் இனும் ஒழிப்பு சட்டம் உள்பட) செல்லும் என்று ஆர்டிகிள் 31B என்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்
இதர சர்க்கார் அறிக்கைகள்

உணவுத் தானியக்'கரார்' (லெவி) கொள்முதல் உத்தரவு (1951)

[சென்னைச் சர்க்காரால் 18-5-1951ல் இக் கட்டுப்பாடு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 18-5-1951 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட் - பாகம் II விசேஷ வெளியீட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. இது அன்று முதல் அமுலுக்கு வந்துவிட்டது.]

'லெவி' கொள்முதல் உத்தரவு அமுலில் இருக்கும் இடங்கள் :—(1) தென் கன்னடம் ஜில்லா (2) தென் ஆற்காடு ஜில்லாவில் சில இடங்கள் (3) மதுரை ஜில்லாவில் சில இடங்கள் (4) திருச்சி ஜில்லாவில் சில இடங்கள் (5) ஆந்திராவில் ஸ்ரீகாகுளம் ஜில்லாவில் சில இடங்களிலும் தான் இக்கட்டுப்பாடு உத்தரவு அமுலில் இருக்கும். இக்கட்டுப்பாடு உத்தரவின் 1ஆவது ஷெடியூலில் இந்த இடங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. (தமிழ் ஜில்லாக்கள் சம்பந்தப்பட்ட வரை இக்கட்டுப்பாடு உத்தரவு அமுலில் உள்ள இடங்கள் கீழே விவரிக்கப்பட்டிருக்கின்றன.)

'உணவுத் தானியம்' என்றால் என்ன?:—இக்கட்டுப்பாடு உத்தரவில் 'உணவுத் தானியம்' என்றால் தென் ஆற்காடு ஜில்லாவில் மட்டில் நெல், அரிசி, சோளம், கம்பு, ராகி, கொரா, சாமை, வரகு, (வாரிகலு) என்று அர்த்தம். மற்ற ஜில்லாக்களில் நெல் அல்லது அரிசி என்று தான் அர்த்தம்.

யார் எவ்வளவு உணவு தானியம் கொடுக்கவேண்டும்?:—1360 - ஆம் பசலியிலோ அதற்குப் பின்வரும் பசலிகளிலோ இந்தக் கட்டுப்பாடு உத்தரவு அமுலில் இருக்கும் இடங்களில் உள்ள நிலங்களில் உணவுத் தானியம் சாகுபடி செய்யப்பட்டால், 'உபரி தானிய'த்தை ஜில்லா கலெக்டருக்கோ, கலெக்டரிடம் அனுமதி பெற்ற கொள்முதல் ஏஜண்டுக்கோ விற்றுவிட வேண்டும். நிலத்தின் சொந்தக்காரராக இருந்தாலும் சரி, சாகுபடி செய்பவர், குத்தகைதார், உள் குத்தகைதார், அல்லது எந்தப் பாத்தியத்தில் சாகுபடி செய்தாலும் சரி அவர்களும், தம் நிலத்தை வேறு நபர்களுக்குக் குத்தகைக்கு விட்டிருப்பவர்களும் மேற்கண்ட விதம் உபரி தானியத்தை விற்றுவிட வேண்டும். இப் பொறுப்பு மேற்கண்ட ஒவ்வொருவருக்கும் தனிப் பொறுப்பாகவும் கூட்டுப்பொறுப்பாகவும் பாவிக்கப்படும். ஒவ்வொருவரும் எவ்வளவு 'உபரி தானியம்' விற்கவேண்டுமென்று ஜில்லா கலெக்டரோ, அவரிடம் அதிகாரம் பெற்ற அதிகாரியோ இந்தக் கட்டுப்பாடு உத்தரவின் II வது ஷெடியூலில் கண்ட வீதாசார அளவுப்படி நிர்ணயம் செய்வார். இதற்குத்தான் 'லெவி' கொள்முதல் என்று பெயர். குறிப்பிட்ட நபர்கள் சம்பந்தப்பட்ட வரை இந்த அளவை மாற்றவும் இவர்களுக்கு அதிகாரமும் உண்டு. எந்தத் தேதிக்குள் அந்தந்த இடங்களில் உணவுத் தானியம் அளக்கப்பட வேண்டுமென்று அந்தந்த ஜில்லா கலெக்டர்கள் ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்வார்கள். அத்தேதிக்குள் அந்தந்தக் கிராமத்திலோ கொள்முதல் ஏஜண்டின் கிடங்கிலோ உபரி உணவு தானியம் அளக்கப்பட வேண்டும். ராஜ்ய சர்க்காரால் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும் விலை அதற்குக் கொடுக்கப்படும். இவ்விதம் மேற்கண்ட கெடுவுக்குள் உணவுத் தானியம் அளக்காவிட்டால் அது குற்றமாகும். தவிர அதிகாரிகள் உபரி தானியத்தைக் கைப்பற்றிக் கொள்முதல் ஏஜண்டிடம் விற்றுவிடலாம். கிரிமினல் வழக்கும் தொடரப் படலாம். ஆனால் இக்குற்றத்திற்காக ஜில்லா கலெக்டரோ அல்லது ஜில்லா சப்ளை ஆபீசரோ ராஜி செய்தும் கொள்ளலாம். ராஜி செய்து கொள்ள, குற்றம் செய்தவர் எவ்வளவு உபரி தானியம் அளக்க

வேண்டுமோ, அதன் விலையைப் போல் 3 மடங்குள்ள அபராதத் தொகையை வாங்கிக்கொண்டு தான் ராஜி செய்யமுடியும். இந்த அபராதம் கொடுக்கத் தவறினாலும் கிரிமினல் வழக்குத் தொடரலாம். வழக்கு, கோர்ட்டில் நடந்தால் குற்றவாளி அடையும் தண்டனை தவிர, குற்றம் சம்பந்தப்பட்ட உணவுத் தானியமும், சாக்கு வண்டி முதலியவைகளும் சர்க்காருக்குப் பறிமுதல் செய்யக் கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு.

ரிவன்யூ இன்ஸ்பெக்டர் அல்லது பிர்கா சப்ளை ஆபீசர் அந்தஸ்துக்குக் குறையாத ரிவின்யூ அதிகாரிகளும், உதவி ரேஷன் ஆபீசர் அந்தஸ்துக்குக் குறையாத ரேஷன் அதிகாரிகளும், சப் இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்குக் குறையாத லஞ்ச ஒழிப்பு, கள்ளமார்க்கெட் ஒழிப்பு இலாகா போலீஸ் அதிகாரிகளும் எந்த இடத்தையும் சோதனை போடலாம்; இவ்வுத்தரவை மீறிக் கைவசம் வைத்துக் கொண்டிருப்பதாகக் கருதப்படும் உணவுத் தானியம், சாக்கு வண்டி முதலியவற்றைக் கைப்பற்றலாம். பூட்டியிருக்கும் இடங்களை இரண்டு சம்பந்தமில்லாத சாட்சிகளை வைத்துக்கொண்டு இவ்வதிகாரிகள் பூட்டை உடைத்தும் சோதனை போடலாம்.

குறிப்பிட்ட நபர்களிடமிருந்தோ சில வகையைச் சேர்ந்தவர்களிடமிருந்தோ அவர்களிடம் கையிருப்பு உணவுத் தானியம் எவ்வளவு என்று கணக்கு அனுப்பும்படி சேட்டு ஜில்லா கலெக்டர் ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்யலாம்.

ஷெடியூல் I 'லெவி' கொள் முதல் உத்தரவு அமுலில் இருக்கும் இடங்கள்.

1. தென் கன்னடம் ஜில்லா.

2. தென் ஆற்காடுஜில்லாவில். (1) சிதம்பரம் தாலூகா பூராவும் (2) விருத்தாசலம் தாலூகாவில் நல்லூர், சிறு பாக்கம் ரிவின்யூ பிர்காக்கள் தவிர மற்ற எல்லாப் பிர்காக்களும், (3) கடலூர் தாலூகாவில், பண்ருட்டி, காடாம்புலியூர் ரிவின்யூ பிர்காக்கள் தவிர, மற்ற எல்லாப் பிர்காக்களும். (4) திருக்கோயிலூர் தாலூகாவில் திருநாவலூர் திருக்கோயிலூர் ரிவின்யூ பிர்காக்களில் மட்டில். (5) கள்ளக்குறிச்சி தாலூக்காவில், கள்ளக்குறிச்சி, வடக்கனந்தல், சின்னசேலம் ரிவின்யூ பிர்காக்களில் மட்டில்.

3. மதுரை ஜில்லாவில்:—(a) மேலூர் உள்பட எல்லாத் தாலூகாக்களிலும் பெரியாறும் அதன் வாய்க்கால்களும் பாசனமுள்ள ஆயக்கட்டு. (b) மதுரை தாலூகாவில் நிலையூர் சானல் பாசனம்; வைகையில் பிரியும் தென்கல் பாசனம்; துவரைமான் கண்மை சப்ளை சானல் பாசனம்; மதகுளம் ஏரி சப்ளை சானல் பாசனம்; புதுக்குளம் ஏரி சப்ளை சானல் பாசனம், அவனியாபுரம், சப்ளை சானல் பாசனம்; சிந்தாமணி ஏரி சப்ளை சானல் பாசனம்; அனுப்பனடி கண்மை சப்ளை சானல் பாசனம்; பனையூர் கண்மை சப்ளை சானல் பாசனம்; கொந்தகை சப்ளை சானல் பாசனம் — உள்ள ஆயக்கட்டுகள் (c) திண்டுக்கல் தாலூகாவில்—அய்யம்பாளயத்தில் அய்யம்பாளயம் நதிப்பாசன ஆயக்கட்டு. சித்திராவு, நரசிங்கபுரம், ஆத்தூர், போடிகாமன்வாடி, ஜீவல்சாகு, தாமரைக்குளம், அம்மாபட்டி இந்த இடங்களில் குடவனூர் பாசனம் உள்ள ஆயக்கட்டு, சந்தானவர்த்தினி கொடகனூர், வரட்டார், இவைகளின் கிளைகள் இவை பாசனமுள்ள ஆயக்கட்டு (d) நிலக்கோட்டை தாலூகாவில், சேவுகம் பட்டி கிராமத்தில் அய்யம்பாளயம் நதிப்பாசனம்; வத்தலகுண்டில் மஞ்சலாறு பாசனம்; பள்ளப்பட்டியில் மஞ்சலாறு உபநதிகளிலிருந்து பிரியும் சிறுமலையில் சானல் பாசனம்; (e) பழநி தாலூகாவில் ஷண்முக நதியும் அதில் சேரும் அல்லது அதிலிருந்து பிரியும் சானல்களால் பழநி, மானூர், பிர்காக்களில் பாசனமுள்ள இடங்கள்; நகஜியார், நல்லதங்கையார் இவைகள் பாசனம்; (f) பெரிய குளம் தாலூகாவில் தேவதானம் பட்டியிலும் கங்குவாருப் பட்டியிலும் உள்ள மஞ்சலாறு பாசனம்; தென்கரை, தாமரைக்குளம், மேல் மங்கலம், ஜெயமங்கலம், கொல்லபுரம் இந்த இடங்களில் வரகாட்டாறு பாசனம்; வடகரை, கெல்ல வடகரை கிராமங்களில் குக்கலூர், பாம்பாறு பாசனம்; தேனிக்கல், பனசலையாறு பாசனம்; குன்னூர் கிராமத்தில் வைகை பாசனம்; கொத்தகுடி, போடி, கிராமங்களில் கொத்தகுடி ஆறு பாசனம்.

4. திருச்சிராப்பள்ளி ஜில்லாவில்:—

1. காவேரி அப்பர் அணைக்கட்டு சானல்கள்

2. கொள்ளிடம் சானல் 3. நந்தையார் சானல் 4. தென்கரை சானல் 5. அமராவதி சானல் 6. செய்யலாறு 7. அய்யாறு 8. தளுகையாறு 9. வென்னாறு — இவைகளின் பாசனம் — ஆயக்கட்டு.

5. ஆந்திராவில் ஸ்ரீகாகுளம் ஜில்லாவில் சில இடங்கள்.

ஷெடியூல் II லெவி கொள்முதல் விகிதம்.

தென் ஆற்காடு ஜில்லாவில்

நெல் சாகுபடி செய்த விஸ்தீரணம்	எகர் 1-க்கு எத்தனை மூட்டைநெல் கொடுக்க வேண்டும் (1 மூட்டை—1½ இம்பீரியல்மணங்கு) சிதம்பரம் தாலூக்கா	மற்றத் தாலூக்காக்கள்
1 எகர் முதல் 10எகர் வரை	5	3
10 ,, 25 ,, ,,	6	4
25 எகரும் அதற்கு மேலும்	8	5

மற்றத் தானியங்கள்

	எகர் 1க்கு எத்தனை மூட்டை 'லெவி'
5 எகருக்குட்பட்டது	கிடையாது.
5 எகர் முதல் 10 எகர் வரை	1
10 எகரும் அதற்கு மேலும்	1½

திருச்சிராப்பள்ளி ஜில்லாவில்

நெல்	எகர் 1-க்கு எத்தனை மூட்டை நெல் கொடுக்க வேண்டும். (1மூட்டை =1½ இம்பீரியல் மணங்கு)
1 எகர் முதல் 2 எகர் வரை	1
2 ,, 3 ,,	2
3 ,, 10 ,,	5
10 ,, 20 ,,	6
20 எகரும் அதற்கு மேலும்	8

மதுரை ஜில்லாவில்

எகர் 1-க்கு 48 பட்டணம் படி நெல் கொண்ட மூட்டைகள் ஒவ்வொரு போகத்திற்கும் எவ்வளவு கொடுக்கவேண்டும்.

எகர் 1-க்கு விளைவு மூட்டைகள்	2 எகர் முதல் 5 எகர் வரை	5 எகர் முதல் 10 எகர் வரை	10 எகர் முதல் 25 எகர் வரை	25 எகர் முதல் 40 எகர் வரை	40 எகருக்கு மேல்
3முதல் 7மூட்டைகளாக இருந்தால்	1	1	1	1	1
7 ,, 8 ..	1	1	2	2	2
8 ,, 10 ..	2	2	2	3	3
10 ,, 12 ..	2	3	3	4	4
12 ,, 13 ..	3	4	4	5	5
13 ,, 15 ..	4	4	5	5	6
15 ,, 17 ..	4	5	6	6	7
17 ,, 18 ..	5	6	6	7	8
18 ,, 20 ...	6	7	7	8	9
20 ,, 22 ..	7	8	8	9	10
22 ,, 23 ..	8	9	10	10	11
23 ,, 25 ..	9	10	11	11	12
25 ,, 27 ..	10	11	12	12	13
27-ம் அதற்கு மேலும் ..	11	12	13	13	14

ஒருவருக்கு அந்த ஜில்லாவில் உள்ள மொத்த நிலங்கள் எல்லாவற்றையும் சேர்த்து மேற்கண்ட அட்டவணைப்படி 'லெவி' நிர்ணயம் செய்யப்படும். ஒத்திதார்களும் பட்டாதார்கள் போலவே பாவிக்கப்படுவார்கள். பிரிபடாத குடும்பம் ஒரு தனி பேராகப் பாவிக்கப்படும். கணவன் மனைவி, இன்னும் சேர்ந்து வசிக்கும் உறவினர்கள் சேர்ந்து ஒரு 'யூனிட்' ஆகக் கணக்குச் செய்யப்படும். நெல் விளையும் இடங்கள் தனியாகவும் மற்றத்தானியங்கள் விளையும் இடங்கள் தனியாகவும் கணக்குச் செய்யப்படும்.

187709

உணவுத்தானியத் தீவிரக் கொள்முதல் உத்தரவு (1951)

[சென்னைச் சர்க்காரால் 7-5-1951-ல் இச் சட்டப்பாடு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 11-5-1951 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் செஜட் பாகம் II விசேஷ வெளியீட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. இது அன்று முதல் அமுலுக்கு வந்து விட்டது. 30-6-1950-ல் எற்பட்டிருந்த உணவுத் தானியத் தீவிரக் கொள்முதல் உத்தரவு இதன் மூலம் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.]

அமுலில் இருக்கும் இடங்கள்: இக் கண்ட்ரோல் உத்தரவு தமிழ்நாட்டில் தஞ்சை ஜில்லா பூராவிலும், நீலகிரி ஜில்லா பூராவிலும் ஆந்திராவில் சில பாகங்களிலும் தான் அமுலில் இருக்கும்.

உணவுத் தானியம் என்றால் என்ன?: தஞ்சை ஜில்லாவும் நீலகிரி தவிர மற்ற ஜில்லாக்களும் சம்பந்தப்பட்ட வரையில் 'உணவுத் தானியம் என்றால் நெல் அல்லது அரிசியைத் தான் குறிப்பிடும். நீலகிரி ஜில்லா சம்பந்தப்பட்டவரையில் 'உணவுத்தானியம்' என்றால், நெல், அரிசி, சோளம், கம்பு, ராகி, கொறா, சாமை, வரகு, வாரிகலு இவைகளைக் குறிப்பிடும்.

'உபரிதானியத்தைக் கொடுத்து விட வேண்டும்: 1360-ஆம் பசலியிலோ அதற்குப் பின்போ நிலத்தைச்சாகுபடி செய்திருப்பவர்கள் சொந்தக்காரர்களாக இருந்தாலும், குத்தகைதார் அல்லது உள் குத்தகைதாராக இருந்தாலும் வேறு எந்தப் பாத்தியத்தில் நிலத்தைச் சாகுபடி செய்திருந்தாலும், ஒவ்வொரு அறுவடைக்குப் பின்பும் தாங்கள் கைவசம் இருக்கும் 'உபரி தானியத்தை' கலெக்டரிடமோ, கலெக்டரிடம் லைசென்சு பெற்ற கொள்முதல் ஏஜண்டிடமோ விற்று விட வேண்டும். தம் நிலத்தைக் குத்தகைக்கு விட்டு, குத்தகைக்காக உணவுத் தானியம் வாங்குபவர்களும் வட்டிக்காக உணவுத் தானியம் வாங்குபவர்களும் வேறு எந்த வகையில் உணவுத் தானியம் கைவசம் வைத்திருப்பவரும் (அதாவது லைசென்சு பெற்ற மொத்த வியாபாரிகளும் சில்லறை வியாபாரிகளும் தவிர மற்ற எவரும்) மேற்கண்டபடி 'உபரிதானிய' த்தை விற்றுவிடவேண்டும். 'உபரிதானியம்' எவ்வளவு என்று கலெக்டரோ அவரிடம் அதிகாரம் பெற்ற அதிகாரியோ நிர்ணயம் செய்வார். கீழ்க்கண்ட செலவுகளுக்காகத் தேவையான தானியம் போகப்பாக்கியைத்தான் 'உபரிதானியம்' என்று நிர்ணயம். செய்யப்படும். அதாவது:— (1) தமக்கும் குடும்பத்தினருக்கும் சாப்பாட்டுக்குத் தேவையான தானியம் (2) குத்தகைக்கு அளக்க வேண்டிய தானியம் (3) குத்தகைதார் அல்லது சாகுபடிக்காரருக்கு விவசாயச் செலவுகளுக்காக முன்கூட்டி தானியம் கொடுக்கும் வழககம் இருந்தால் அதற்கான தானியம் (4) விதைதானியம்; கூலிக்காகக் கொடுக்க வேண்டிய தானியம் (5) மாமூலாகக் கிராம ஊழியர்களுக்குக் கொடுக்க வேண்டிய தானியம் இவைகள் போக, பாக்கி தான் 'உபரிதானிய' மாக நிர்ணயம் செய்யப்படும். ஜமீன் நிலங்களில் குடி வாரபாத்தியமுள்ளவர்கள் மேல்வாரத்திற்காகக் கொடுக்கவேண்டிய தானியம் கொடுபடாமலிருந்தால் அது ஜாடாவும் ரயத்தினிடம் இருக்கும் 'உபரிதானிய' மாக நிர்ணயம் செய்யப்படும். ஒரு தடவை நிர்ணயம் செய்யப்பட்ட பிறகும் அதைமாற்ற அதை நிர்ணயம் செய்த அதிகாரிக்கும், அவருக்கு மேல் உள்ள அதிகாரிகளுக்கும் அதிகாரம் உணடு. இவ்விதம் 'உபரி தானியம்' நிர்ணயம் செய்யப்பட்டதை அவ்வப்பொழுது ஜில்லா கலெக்டரால் ஜில்லா செஜட்டில் குறிப்பிடப்படும் தேதிக்குள் கொள் முதல் ஏஜண்டிடம் விற்றுவிடவேண்டும். உபரி தானியத்தைக் கிராமத்திலோ, கொள் முதல் ஏஜண்டின் கிடங்கிலோ கொடுக்க வேண்டும். ஜில்லாகலெக்டரால் குறிப்பிடப் பட்டிருக்கும் தேதிக்குள் உபரி தானியத்தை அளக்காவிட்டால் அது குற்றமாவது தவிர அதிகாரிகள் அவ்வித உபரிதானியத்தை அவர்களே கைப்பற்றி, கொள்முதல் ஏஜண்டுகளிடம் விற்றுவிடலாம். மேலும் ஒவ்வொரு அறுவடை முடிந்த 4 மாதங்களுக்குமேல் எவரும் 'உபரிதானியத்' கைவசம் வைத்திருப்பதே குற்றமாகும்.

வேறு ஒருவரும் உணவுத் தானியம் விற்கவும் வாங்கவும் கூடாது: இச்சட்டுப்பாடு உத்தரவு அமுலில் இருக்கும் இடங்களில் ஜில்லாகலெக்டர் அல்லது கொள்முதல் ஏஜண்டுகள் தவிர வேறு எவரும 'ரேஷன்கார்டு' அல்லது 'பர்மிட்' இல்லாமல் எவரிடமும் உணவுத் தானியம் வாங்குவதும் விற்பதும் குற்றமாகும்.

ஸ்டாக்-சோதனை: எவரிடமும் கைவசம் உள்ள 'ஸ்டாக்' எவ்வளவு என்று கணக்குக் கொடுக்கும்படி ஜில்லா கலெக்டர் (ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்வது மூலம்) உத்தரவிடலாம். "லெவி" கொள்முதல் உத்தரவில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகாரிகளே இவ்வுத்தரவின்படிக்கும் சோதனை முதலிய செய்ய உரிமையுள்ள அதிகாரிகள்.

சென்னை விருந்துக் கட்டுப்பாடு உத்தரவு திருத்தம்.

13-2-1951-ல் சென்னைச் சர்க்காரால் பிறப்பித்துள்ள விருந்துக் கட்டுப்பாடு உத்தரவில் (Madras Guest Control Order) எந்த எந்தச் சந்தர்ப்பங்களில் எவ்வளவு விருந்தினர்களுக்கு மேல் விருந்து அளிக்கக் கூடாதென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. (1951 "வக்கீல்" மார்ச் மாத இதழ் பார்க்கவும்) விருந்தினர்களின் எண்ணிக்கையைக் கணக்குச் செய்வதில் விருந்து அளிப்பவருடைய குடும்பத்தினரைக (Members of the house hold) கணக்கில் சேர்த்துக் கொள்ள வேண்டியதில்லை. என்று அதில் இருக்கிறது. 'விருந்து அளிப்பவரின் குடும்பத்தினர்கள்' என்றால் அவருடன் சாசுவதமாக அதே வீட்டில் வசித்து வருபவர்களைத் தான் குறிப்பிடுமென்றும், விருந்துக்காகத் தாற்காலிகமாக வந்திருக்கும் உறவினர்களைக் குறிக்காதென்றும் இப்பொழுது ஒரு விளக்கம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

[22-5-1951-சென்னைச் சர்க்கார் கெஜட் - பாகம் 2 ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 105]

புண்ணாக்கு எரு (போக்குவரத்து) கட்டுப்பாடு ரத்து.

1949 ஆம் வருடத்திய புண்ணாக்கு (போக்குவரத்து) கட்டுப்பாடு உத்தரவு (Madras Oilcake - Movement - Control Order) ரத்துச் செய்யப்பட்டது. போன்மீல் முதலிய எருக்களைச் சென்னை ராஜ்யத்திலிருந்து வெளியே கொண்டுபோகக் கூடாதென்ற உத்தரவும் ரத்துச் செய்யப்பட்டது.

[1-5-1951 - சென்னைச் சர்க்கார் கெஜட் - பாகம் II பக்கம் 609]

பருத்திக்கொட்டை போக்குவரத்துக் கட்டுப்பாடு உத்தரவு 1951

(Madras Cotton Seed Movement Control Order 1951) இது 31 5-1951 முதல் அமுலுக்கு வந்தது. இக் கட்டுப்பாடு உத்தரவின்படி, பெல்லாரி, அனந்தப்பூர், கடப்பை, கர்நூல் ஜில்லாக்களிலிருந்து இந்த ராஜ்யத்தில் வேறு இடங்களுக்கு ஜில்லா கலெக்டருடைய 'பர்மிட்' இல்லாமல் எவரும் பருத்திக்கொட்டை அனுப்ப முடியாது.

[31-5-1951 - சென்னைச் சர்க்கார் கெஜட் - பாகம் II விசேஷ வெளியீடு]

இன்று அமுலில் இருக்கும் கட்டுப்பாடு (கண்ட்ரோல்) உத்தரவுகள்.

[1951 ஜூலை மாத ஆரம்பத்தில் அமுலில் இருக்கும் "கண்ட்ரோல்" உத்தரவுகள் எவை என்று நேயர்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்வதற்காகச் சர்க்கார் பிரசுரங்களிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.]

உணவுத் தானியங்களைப்பற்றிய கண்ட்ரோல் உத்தரவுகள்.

(1) சென்னை உணவுத் தானிய விலைக் கட்டுப்பாடு உத்தரவு *1949*:—(The Madras Food Grains Price Control Order 1949.) ஒவ்வொரு ஜில்லாவிலும் நெல் அரிசி முதலிய எல்லா உணவுத் தானியங்களும் (1949-50-க்கு) விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தினுசு உணவுத் தானியத்திற்கும், அந்தந்த ஜில்லாவுக்கு ஏற்றவாறு, மில் வாயில் விலை, ரயில் ஏற்று விலை, மொத்த வியாபார விலை இவைகள் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன. பின்பு இந்த விலையை உயர்த்தவும் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

(2) சென்னை உணவுத் தானிய தீவிரக் கொள்முதல் உத்தரவு *1951*:—(The Madras Food Grains Intensive Procurement Order - 1951.) இது 11-5-1951 முதல் அமுலில் இருக்கிறது. இவ்வுத்தரவு ஆந்திர நாட்டில் கிழக்குக் கோதாவரி, மேற்குக் கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர் ஜில்லாக்களில் சில இடங்களிலும் தமிழ் நாட்டில் தஞ்சாவூர் நீலகிரி ஜில்லாக்கள் பூராவிலும் பட்டில்தான் அமுலில் இருக்கும். இந்த ஜில்லாக்களில் மட்டில் தீவிரக் கொள்முதல் செய்யப்பட வேண்டுமென்ற புதிய சர்க்கார் கொள்கையை அனுசரித்து இக்கட்டுப்பாடு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்புது உத்தரவு இந்த இதழில் விவரமாக விளக்கப்பட்டிருக்கிறது.

(3) சென்னை உணவுத் தானிய கராார் (லெவி) கொள்முதல் உத்தரவு *1951*:—(The Madras Food Grains — Levy Procurement - Order 1951) இவ்வுத்தரவு 18-5-1951 தேதி அமுலுக்கு வந்தது. தென் கன்னடம் ஜில்லா பூராவிலும், தென் ஆற்காடு

மதுரை, திருச்சி ஜில்லாக்களில் சில இடங்களிலும், ஆந்திர தேசத்தில் சில இடங்களிலும் தான் அமுலில் இருக்கிறது. இக்கட்டுப்பாடு உத்தரவு இந்த இதழில் விவரமாக விளக்கப்பட்டிருக்கிறது.

(4) உப்பு விலைக் கட்டுப்பாடு உத்தரவு 1947:—Salt Price Control Order 1947. அந்தந்த ஜில்லா கலெக்டர் உப்பின் மொத்த விலையையும் சில்லறை வியாபார விலையையும் நிர்ணயம் செய்ய அதிகாரம் அளிக்கும் உத்தரவு. அவ்விலைக்கு மேல் உப்பு விற்பது குற்றம்.

(5) சென்னைப் பங்கீடு பூர்வாங்க ஏற்பாடு உத்தரவு 1947:—The Madras Rationing Preparatory Measures Order-1947. ஒரு இடத்தில் சட்ட பூர்வமான "ரேஷன்" அமுலுக்குக் கொண்டு வரு முன் செய்யவேண்டிய ஏற்பாடுகளைப் பற்றியது.

(6) சென்னைப்பங்கீடுவிசாரணை உத்தரவு 1947:—(The Madars Ratoning Enquiry Order 1947). ஒரு இடத்தில் சட்ட பூர்வமான 'ரேஷன்' அமுலுக்குக் கொண்டு வருமுன் அங்கே உள்ள ஹோட்டல்கள் சத்திரம் போன்ற ஸ்தாபனங்களுக்குத் தேவையான உணவு அளவைப் பற்றி விசாரணை செய்ய.

(7) சென்னைப்பங்கீடு உத்தரவு 1947: (The Madras Rationing order 1947) சட்ட பூர்வமான 'ரேஷன்' அமுலில் இருக்கும் இடங்களில் உணவுத் தானியங்கள் பங்கீடு செய்யப்படும் முறைபற்றியது. இவ்வுத்தரவுப்படி கீழ்க்கண்ட செய்கைகள் குற்றமாகும்:—1. ஒருவருடைய ரேஷன் கார்டை வேறு ஒருவருக்கு மாற்றுவது. 2. வேறு ஒருவருடைய ரேஷன் கார்டை உபயோகிப்பது. 3. ரேஷன் கார்டைத் திருத்துவது அழிப்பது. (2 அணா அபராதம் கொடுத்த புதிய ரேஷன் கார்டு வாங்கிக்கொள்ளலாம்) 4. 'ரேஷன்' கொடுக்கப்படும் நபர் இறந்தால் 10 நாட்களுக்குள் ரேஷனிங் ஆபீசருக்குத் தெரிவிக்கவேண்டும். ரேஷன் கொடுக்கப்படும் நபர் 7 நாட்கள் ஊரில் இல்லாதிருந்தால் அதை 14 நாட்களுக்குள் ஆபீசருக்குத் தெரிவிக்க வேண்டும். 5. விலாசம் மாற்றினால் 10 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும். 6. ஊரில் இல்லாதவருடைய ரேஷனை வாங்கக் கூடாது. 7. ஊரை விட்டுப் போனால் ரேஷன் கார்டை ரேஷனிங் ஆபீசரிடம் திரும்பிக் கொடுத்துவிடவேண்டும். எட்டு வாரங்களுக்குக் குறையாமல் ரேஷன் இடத்தை விட்டுக் குடும்பத்துடன் வேறு ஊருக்குப் போகும் போதும் ரேஷன் கார்டை ரேஷனிங் ஆபீசரிடம் கொடுத்து விடவேண்டும். 8. ஒரு நபர் ஒரு ரேஷன் கார்டில்தான் சேர்ந்து கொள்ள வேண்டும். அதாவது ஒரே நபர் பல ரேஷன் கார்டுகள் மூலம் உணவுத் தானியம் வாங்கக்கூடாது. 9. ஒரு ரேஷன் கார்டுக்கு மேல் வைத்திருப்பதே குற்றம். 10. ரேஷன் சாமான்களை அதிகார பூர்வமல்லாதவர்களிடமிருந்து வாங்கக் கூடாது. 11. ரேஷன் இடங்களில் நிலம் உள்ளவர்கள் அறுவடைத்தேதியை ரேஷனிங் ஆபீசருக்குத் தெரிவிக்க வேண்டும். அறுவடையான தானியத்தை வைத்திருக்கவும் எடுத்துச் செல்லவும் விற்கவும் 'பர்மிட்' வாங்கிக் கொள்ள வேண்டும். 12. நிலம் உள்ளவர்கள் சொந்த உபயோகத்திற்கு ரேஷன் இடங்களுக்குள் தானியம் கொண்டுவர பர்மிட் வாங்கிக் கொண்டு, தானியம் வந்த தேதியும் வைத்திருக்கும் இடத்தையும், ரேஷனிங் ஆபீசருக்குத் தெரிவிக்க வேண்டும். கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும்.

(8). அத்தியாவசிய சாமான்களை ஓர் அளவுக்குள்தான் வாங்கலாம் என்ற கட்டுப்பாடு உத்தரவு 1947. The Essential Articles Restricted Acquisition order 1947. இது சென்னை ராஜ்யம் முழுவதிலும் அமுலில் இருக்கிறது. இதன்படி நெல், அரிசி, சோளம், மற்ற உணவு தானியங்கள் (millets) கோதுமை, மைதா, சோளமாவு, அரிசிமாவு இவைகளை ஒரு தனி நபரோ ஹோட்டல் முதலிய ஒரு ஸ்தாபனமோ அவரவருடைய ஒரு மாதத்திற்கு வேண்டிய அளவுக்கு மேல் கையிலிருக்கும்படி வாங்கக்கூடாது. பற்றாக்குறை ஜில்லாக்களில் 'ரேஷன்' இல்லாத இடங்களிலும், உபரி ஜில்லாக்களில் பற்றாக்குறை தாலூகாக்களிலும் இருப்பவர்கள் பட்டியல் அதாவது உணவுத் தானியத் தீவிரக் கொள்முதல் உத்தரவு அமுலில் இல்லாத இடங்களில் இருப்பவர்கள் பட்டியல் 6 மாதங்களுக்கு தேவையான அளவு உணவுத்தானியம் வைத்திருக்கலாம். இது நபர் 1-க்கு நாள் 1-க்கு 12 அவுன்ஸ் வீதம் கணக்குச் செய்யப்பட வேண்டும். (உற்பத்தி, வியாபாரம் கைத்தொழில் செய்பவர்கள், சரக்கு எடுத்துச் செல்பவர்கள், கிடங்குக்காரர்கள் இவர்களிடம் அவரவர்களின் தொழில் சம்பந்தமாய், சாதாரணமாய்க் கைவசம் இருக்கும் உணவுத்தானியத்திற்கு இவ்வுத்தரவு கிடையாது)

[தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்கவும்]

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாடு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

முதலாளியின் உத்தரவுப்படி, அவருக்குப் பயந்து பொய்க் கணக்குத் தயாரித்த குமாஸ்தாவும் குற்றவாளியா?

[சென்னை ஹைகோர்ட். ஆதாரம்: 64 லா வீக்லி - 445]

ஒரு கூட்டுறவுப் பண்டகசாலையின் (கோவா பரேடிவ் ஸ்டோர்ஸ்) தலைவரும், அதில் வேலை பார்க்கும் குமாஸ்தாவும் சேர்ந்து அந்த ஸ்டோரிலிருந்து வெல்லம் கடலை இவைகளை விற்பனை செய்து விட்டனர். விற்பனை செய்தபோது இவைகளை ஸ்டோரின் கணக்குக்கே அவர்கள் கொண்டுவரவில்லை. பின்பு சில மாதங்கள் கழித்து, இவைகளை அன்றுதான் விற்றது போல் பொய்ப் பட்டியல்கள் (பில்) தயார் செய்து விட்டனர். இது கண்டுபிடிக்கப்பட்டு, இருவர் மீதும் இந்தியன் பீனல்கோடு 477 ஆவது செக்ஷன்படி கிரிமினல் வழக்குத் தொடரப்பட்டு மாஜிஸ்ட்ரேட்டால் இருவரும் தண்டிக்கப்பட்டனர். செஷன்ஸ் ஜட்ஜுக்கு இவர்கள் செய்த அப்பீலில், தண்டனை உறுதி செய்யப்பட்டது. ஹைகோர்ட்டுக்கு இருவரும் அப்பீல் செய்தனர். அங்கே குமாஸ்தாவுக்காக ஒரு கட்சி சொல்லப்பட்டது. அதாவது அக் குமாஸ்தா, அப்பண்டகசாலையின் தலைவருடைய உத்தரவுகளின்படி நடக்க வேண்டியவர்; ஆதலால் அவருக்கு 'பயந்து' அவர் சொல்லியபடி இப்பொய்க் கணக்குத் தயார் செய்த குமாஸ்தா குற்றவாளி ஆகமாட்டார் என்று வாதாடப் பட்டது. இதை உயர் நீதிபதி அவர்கள் ஏற்கவில்லை. குற்றமான செய்கை செய்யும் ஒருவர் அதை ஒரு பயத்தினால் செய்திருந்தால் ஒரே ஒரு சந்தர்ப்பத்தில்தான் அது குற்றமாகாது. அதாவது அச்செய்கையை அவர் செய்யாவிட்டால், அத்தட்சணமே அவருடைய உயிருக்கே ஆபத்து வந்து விடும் என்ற பயத்தினாலோ, அல்லது உடனே உயிருக்கு ஆபத்து வரக்கூடிய சரீர இம்சை சம்பவிக்கக் கூடுமென்ற பயத்தினாலோ, அவர் ஒரு குற்றம் செய்து விட்டால் மட்டில் சட்டம் அவரை மன்னித்துக் காப்பாற்றும் என்றும்; அவ்வித மான பயமில்லாமல் சாதாரண பயத்தினால் ஒருவர் குற்றம் செய்து விட்டால் சட்டம் அவரை மன்னிக்காதென்றும் அபிப்பிராயப் பட்டு, குமாஸ்தாவைத் தண்டித்ததும் சரிதான் என்று உயர் நீதிபதி அவர்கள் தீர்ப்பளித்தனர்.

அப்பீல் செய்யாதவர்களுக்கும் நியாயம் வழங்கப்பட்டது.

[சென்னை ஹைகோர்ட். ஆதாரம்: (1951) மதராஸ் லா ஜர்னல் 700]

சென்னை சூதாட்டத் தடைச் சட்டப்படி (Madras Gaming Act) நான்கு பெயர்கள் மீது கிரிமினல் வழக்குத்தொடரப்பட்டது. இச் சட்டத்தின் செக்ஷன் 8-ன் படி ஒருவர் 'பொதுச் சூதாட்ட விடுதி' (Common Gaming House) வைத்திருப்பதே ஒரு குற்றம். அவ் விதமான 'பொதுச் சூதாட்ட விடுதி'யில் யார் சூதாட்டம் ஆடினாலும் அவர்கள் இச்சட்டத்தின் 9 ஆவது செக்ஷன்படி குற்றம் செய்பவர்கள் ஆவார்கள். நான்கு எதிரிகளும் மாஜிஸ்ட்ரேட்டால் தண்டிக்கப்பட்டனர். இவர்கள் 1, 2 எதிரிகள் மட்டில் அப்பீல் செய்தனர். சூதாட்டம் நடந்த வீடு, முதல் எதிரியுடைய சொந்த வீடுதான். ஆனால் இவர் இச்சட்டத்தில் சொல்லியபடி அவ்வீட்டை ஒரு 'சூதாட்ட

விடுதி'யாக வைத்துக் கொள்ளவில்லை என்று அப்பீலில் செஷன்ஸ் ஜட்ஜ் அபிப்பிராயப்பட்டு, அவர் விடுவிக்கப்பட்டார். சூதாட்டம் நடந்த இடம் 'சூதாட்ட விடுதி' இல்லை என்று ஏற்பட்டதால் 2 ஆவது எதிரியும் விடுவிக்கப் பட்டார். ஏனென்றால் 'சூதாட்ட விடுதி'யில் சூதாட்டம் ஆடுவதுதான் குற்றம். அப்பீல் செய்த இருவர்கள் மட்டில் விடுதலை அடைந்தனர். இவர்களுடன் கூட அதே வீட்டில் அதே காலத்தில் ஆட்டம் ஆடிய மற்ற இரண்டு எதிரிகளும் கீழ்க்கோர்ட்டால் தண்டிக்கப்பட்டவர்கள், அப்பீல் செய்யவில்லை. ஆனால் அவர்கள் யாதொரு குற்றமும் செய்யாமலே தண்டிக்கப் பட்டனர் என்று மற்ற இரண்டு எதிரிகளின் அப்பீல் தீர்ப்பிலிருந்து ஏற்படுகிறது. ஆகையால், இந்த வழக்குச் சம்பந்தமான ரிகார்டுகளை, செஷன்ஸ் ஜட்ஜ் ஹைகோர்ட்டுக்கு அனுப்பி, அப்பீல் செய்யாத (ஆனால் அனுவசியமாகத் தண்டனை அடைந்த) 3, 4, எதிரிகளைப் பற்றி என்ன செய்வதென்று கேட்டார். (இப்படிக் கேட்கக் கிரிமினல் வழக்கு முறைச் சட்டம் 438 ஆவது செக்ஷன்படி செஷன்ஸ் ஜட்ஜுக்கு உரிமை உண்டு) ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யாவிட்டாலும் கீழ்க்கோர்ட்டில் தண்டனை அடைந்த 3, 4, எதிரிகளையும் விட்டு விடவேண்டுமென்று உயர் நீதிபதி அவர்கள் உத்தரவிட்டனர். ஏனென்றால் 'பொதுச் சூதாட்ட விடுதி'யில் இவர்கள் சூதாடிய குற்றத்திற்குத் தான் தண்டிக்கப்பட்டனர். இப்பொழுது அவர்கள் ஆடிய இடம் 'பொதுச் சூதாட்ட விடுதி' அல்ல என்று ஏற்பட்டதால், அவர்களும் குற்றம் செய்யவில்லை என்று நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். அப்பீல் செய்யாதவர்களுக்கும் நியாயம் வழங்கப்பட்டது.

பெஞ்சு மாஜிஸ்ட்ரேட்கள் வழக்கை நடத்தியதும் சரி அல்ல; தீர்ப்புச்செய்ததும் சரி அல்ல.

[சென்னை ஹைகோர்ட். ஆதாரம்: (1951) மதராஸ் லா ஜர்னல் 693]

"இந்தப் பெஞ்சு கோர்ட் செய்தது போல் நடக்கும் சட்ட விரோதமான நடவடிக்கைகளினால், பொதுமக்களுக்கு எல்லாம் பெஞ்சு கோர்ட்டுகளின்மீதுள்ள நம்பிக்கையும் குறைந்து போகின்றது. இவ்விதம் பெஞ்சு கோர்ட்டுகள் நடந்து கொள்வது உடனே நிறுத்தப்பட வேண்டும்" என்று இவ்வழக்கில் உயர் நீதிபதி பஞ்சாபகேசய்யர் அவர்கள் அபிப்பிராயப் பட்டனர். பாபட்லா பெஞ்சுக் கோர்ட்டுக்கு 3 அங்கத்தினர்கள் உண்டு. எதிரிகள் மீது தொடரப்பட்ட ஒரு கிரிமினல் வழக்கில் 1950 ஏப்ரல் 19 ஆம் தேதி தீர்ப்புச் சொல்லப் பட்டது. தீர்ப்புச் சொன்னது பெஞ்சுக் கோர்ட் தலைவரும் இன்னும் ஒரு அங்கத்தினரும். மூன்றாவது அங்கத்தினர் (மெம்பர்) ஆஜர் இல்லை. எதிரிகள் தண்டிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டனர். தீர்ப்புச் சொன்னபோது பெஞ்சு மாஜிஸ்ட்ரேட்டுகள் யாதொரு தீர்ப்பும் எழுதவில்லை. பிறகு சாவகாசமாக 24 ஆம் தேதி இவர்கள் ஒரு தீர்ப்பு எழுதி அதைத் தீர்ப்பளிக்கும் போது ஆஜரில் இல்லாத மூன்றாம் மெம்பருக்கு அனுப்பினர். அவர் அத்தீர்ப்பை ஒப்புக்கொள்ளவில்லை. மாறான அபிப்பிராயத்தை எழுதினார். தண்டனை அடைந்த எதிரிகள் ஹைகோர்ட்டுக்கு 'ரிவிஷன்' மனுச்செய்து கொண்டனர். இதில் தான் முன்சொன்னபடி உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். பெஞ்சு கோர்ட் செய்தது ஒரு சாதாரண தவறு (irregularity) அல்ல என்றும் அவர்கள் செய்தது சட்ட விரோதம் (illegality) என்றும் உயர் நீதிபதி அபிப்பிராயப்பட்டனர். மூன்றாவது மெம்பரைக் கலந்து ஆலோசிக்காமல் தண்டனை அளித்ததும் காரணங்கள் காட்டி சட்டப்படி தீர்ப்பு எழுதி, பிறகு தண்டிக்காமல், யாதொரு தீர்ப்புமில்லாமலே எதிரிகளைத் தண்டித்ததும் சட்ட விரோதமான செய்கைகள் என்று எடுத்து காட்டப்பட்டது. இத்தீர்ப்பே செல்லாதென்று எதிரிகள் விடுவிக்கப்பட்டனர். சின்ன வழக்காகையால் மறு விசாரணை வேண்டாமென்றும் நீதிபதி அவர்கள் உத்தரவிட்டனர்.

தகப்பன் யார் என்று கண்டுபிடிக்க விஞ்ஞான ரீதியாக ரத்தப் பரீட்சை செய்ய முடியுமா?

[சென்னை ஹைகோர்ட். ஆதாரம்: 64 லா வீக்லி-468]

இவ்வழக்கில் ஒரு விசேஷ சம்பவம் ஏற்பட்டது. சப்கோர்ட்டில், ஒரு மைனருக்காக அவர் தகப்பன் மீது பாக வியாஜ்யம் போடப் பட்டது. மைனருக்கு அவன் தாயே கார்டியனாக இருந்து இந்தத் தாவா செய்தாள். மைனர் வாதி தமக்குப் பிறந்த மகனல்ல என்று பிரதிவாதி கட்சியாடினார். அத்துடன் பிரதிவாதி நிற்கவில்லை. கோர்ட்டுக்கு ஒரு மனுவும் செய்து கொண்டார். அதாவது—மைனர் வாதியும் அவன் தாயும் கோர்ட்டில் ஆஜராகி ஒவ்வொருவர் உடம்பிலிருந்தும் கொஞ்சம் கொஞ்சம்

ரத்தம் எடுத்துக் கொள்ள ஒரு டாக்டரை அனுமதிக்க வேண்டுமென்றும் அம்பனுவில் கேட்டிருந்தார். அதன் மீது சப்ஜட்ஜ் ஒரு உத்தரவு செய்தார். ஒரு குறிப்பிட்ட தினத்தில் மைனர் வாதியும், அவன் தாயாரும், டாக்டரும் கோர்ட்டில் ஆஜராக வேண்டுமென்று உத்தரவிட்டார். டாக்டருடைய அபிப்பிராயத்தில், இவ்விதம் மைனர் வாதியுடையவும், அவன் தாயருடையவும் ரத்தத்தை எடுத்து, அதைப் பிரதிவாதியின் ரத்தத்துடன் ஒத்துப்பார்த்து ரசாயன விஞ்ஞானப் பரீட்சைகள் செய்து அதிலிருந்து 'தகப்பன்' என்று அழைக்கப் படுபவரின் ரத்தம் மைனர் வாதியிடமிருக்கிறதா இல்லையா என்று சொல்வது விஞ்ஞான ரீதிப்படி சாத்தியமானால், அவ்விதமே செய்யப் படவேண்டுமென்ற அர்த்தத்தில் சப்ஜட்ஜ் இவ்வுத்தரவு செய்திருந்தார். மைனர்வாதியின் தாயார் இதற்குச் சம்மதிக்கவில்லை. அவள் ஹைகோர்ட்டுக்கு 'ரிவிஷன்' செய்து, சப் ஜட்ஜின் இவ்வுத்தரவை ஆட்சேபித்தாள். கட்சிக்காரர்கள் சம்மதிக்காமலிருக்கும் போது இவ்வித உத்தரவு செய்ய எந்தக் கோர்ட்டுக்கும் அதிகாரம் இல்லை என்று உயர் நீதிபதி கனம் ராகவராவ் அவர்கள் அபிப்பிராயப்பட்டு, கீழ்க் கோர்ட்டின் உத்தரவு ரத்துச் செய்யப்பட்டது. சிவில் வழக்கு முறைச் சட்டம் (Civil Procedure Code) செக்ஷன் 151 ல், அந்தந்த வழக்குகளின் ரீதிக்கேற்றபடி எவ்வித யுக்தமான உத்தரவுகளையும் பிறப்பிக்க, சிவில் கோர்ட்டுகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தாலும், வழக்கு முறைக்குச் சம்பந்தமில்லாத இவ்வித உத்தரவு செய்வதை அவ்விதி அனுமதிக்கவில்லை என்று நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். இங்கிலாந்தில் இவ்விதமான பிரச்னைகள் ஏற்பட்டால் விஞ்ஞான ரீதியாக ரத்தத்தைப் பரீட்சை செய்ய கோர்ட் அனுமதிப்பதாக எடுத்துக்காட்டப் பட்டது. உயர் நீதிபதி அவர்கள் இந்தியச்சட்டத்தில் இம் முறையைப் பின்பற்ற இடமில்லை என்று சமாதானம் அளித்தனர்.

இன்று அமுலில் இருக்கும் கண்ட்ரோல் உத்தரவுகள் (13-ம் பக்கம் தொடர்ச்சி)

(9) சென்னைச் சாப்பாடு விடுதிகள் உணவு உத்தரவு 1947. (The Madras Food (Restrictions on Service of Meals by catering Establishment) order 1947.) இது சென்னை ராஜ்யம் முழுவதிலும் அமுலில் இருக்கிறது. ஹோட்டல் முதலிய சாப்பாட்டு விடுதிகள் ஒரு சாப்பாட்டில் மூன்று ரகங்களுக்கு மேல் அளிக்கக்கூடாது. ஒரு முக்கிய உணவும் ஒரு சில்லறை உணவும் ஒரு தித்திப்புப் பண்டமும் அல்லது இரண்டு சில்லறை உணவுகளும் ஒரு தித்திப்புப் பண்டமும்தான் இருக்க வேண்டும்.

(10) சென்னை விருந்துக் கட்டுப்பாடு உத்தரவு (1951) (The Madras Guest Control order 1951.) இது 13-2-1951-ல் அமுலுக்கு வந்தது. சென்னை ராஜ்யம் முழுவதிலும் அமுலில் இருக்கிறது. இதன்படி கலியாண விருந்துகள் இரண்டு வேளைகளுக்கு மேல் இருக்கக் கூடாது. வேளை 1-க்கு 50 விருந்தினர்களுக்குமேல் இருக்கக் கூடாது. நமச் சடங்கு விருந்து ஒரு வேளைதான் நடத்தலாம். அதிலும் 50 விருந்தினருக்குமேல் இருக்கக் கூடாது. மற்ற எந்த விருந்துகளிலும் 24 விருந்தினர்களுக்குமேல் இருக்கக்கூடாது. இக் கண்ட்ரோல் உத்தரவு 1951 "வக்கீல்" மார்ச் மாத இதழில் விவரமாய் விளக்கப்பட்டிருக்கிறது.

(11) சென்னை உணவுத் தானியக் கட்டுப்பாடு உத்தரவு 1947:— (Madras Food Grains Control Order 1947.) உணவுத் தானியங்களில் வியாபாரம் செய்ய லைசென்சு வாங்கிக்கொள்வது பற்றியது.

(12) சென்னை உணவு தானிய போக்குவரத்துக் கட்டுப்பாடு உத்தரவு 1947:— (Madras Food Grains Movement Control Order 1947.) பர்மிட் இல்லாமல் சென்னை ராஜ்யத்திலிருந்து வெளியேயும் உள்ளேயும் உணவுத் தானியம் எடுத்துச் செல்வதைத் தடுக்கும் உத்தரவு. பிரயாணிகள் சிறிய அளவு கையுடன் கொண்டு போகலாம்.

(தொடரும்)

"வக்கீல்" பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியிலேயே பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. தபால் மூலம் அனுப்பப்படும் பத்திரிகை 5-தேதிக்குள் உங்களிடம் கிடைக்காவிட்டால், உடனே "வக்கீல்" காரியாலயத்திற்கு ஒரு கார்டு எழுதவும். சந்தா நம்பரையும் விலாசத்தையும் புரியும்படி எழுதவும்.

ஏஜண்டுகள் மூலம் "வக்கீல்" வாங்கி வரும் இந்தியாவிலிருக்கும் நேயர்களும் 5-தேதிக்குள் "வக்கீல்" கிடைக்காவிட்டால் ஆபீசுக்கு எழுதி தருவித்துக் கொள்ளலாம்.

ஜாகை—வாடகை கட்டுப்பாடு சட்டம்

(1949)

(1951 ஆம் வருஷத்திய திருத்தச் சட்டம் உள்பட - சென்றமாத இதழின் தொடர்ச்சி)

[1949 ஆம் வருடத்திய 25ஆவது சென்னைச் சட்டம் (The Madras Buildings Lease and Rent—Control Act 1949) 1951ஆம் வருடத்திய 8ஆவது சென்னைச் சட்டத்தால் பல முக்கிய விஷயங்களில் திருத்தம் செய்யப்பட்டது. இத் திருத்தச் சட்டம் 1—5—1951ல் அமுலுக்கு வந்தது. இத்திருத்தச் சட்டத்தால் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் முக்கிய மாறுதல்கள் :—

1. வாடகையைப் பாங்கில் கட்டவும் மணியார்டர் செய்யவும் விதிகள். 2. உள்வாடகைக் காரர்களுக்கும் இச்சட்டம் உண்டு. 3. வழக்குகள் நடந்துகொண்டிருக்கும் போதே வாடகைப் பாக்கி இல்லாமல் கட்டிவர வேண்டும். இல்லாவிட்டால் கட்சியாட முடியாது. 4. ஒரு ஊரில் பல கட்டடங்கள் இருந்தால் ஒன்றுதான் சொந்த உபயோகத்திற்கு வைத்துக் கொள்ளலாம். மாத வாடகை ரூ. 25க்கு மேல் உள்ள வசிப்பதற்கான கட்டடங்களும், மாத வாடகை ரூ. 50க்கு மேல் உள்ள மற்றக் கட்டடங்களும் காலியானால் அதிகாரிக்குத் தெரிவிக்கவேண்டும் (Notice of Vacancy). 5. வாடகைப் பாக்கியைக் கொடுக்க, கண்ட்ரோலர் இஷ்டப்பட்டால் கெடுக் கொடுக்கலாம். 6. முன்சீப் கோர்ட்டில் நிறைவேற்ற வேண்டும். 7. ஹைகோர்ட்டுக்கும் ஜில்லா கோர்ட்டுகளுக்கும் 'ரிவிஷன்' அதிகாரம். 8. செலவுத் தொகை போடலாம். இன்னும் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. திருத்தச் சட்டத்தைத் தனியாக விளக்குவதைவிட அத்திருத்தங்களைத் தாய்ச்சட்டத்திலேயே அந்த அந்த இடங்களில் பொருத்தி, ஜாகை - வாடகைக் கட்டுப்பாடு சட்டம் முழுதுமே இங்கு விளக்கப்பட்டிருக்கிறதை நேயர்கள் கவனிக்கவும். சென்றமாத இதழில் செக்ஷன் 7 A முடிய விவரமாய் விளக்கப்பட்டது. இப்பொழுது செக்ஷன் 8 முதல் சட்டத்தில் உள்ள பாக்கி எல்லா செக்ஷன்களும் விளக்கப்பட்டிருக்கின்றன.]

செக்ஷன் 8. வாடகைக்காரர் அடைந்துவரும் வசதிகளில் கட்டடக்காரர் தலையிடக்கூடாது. (1) தகுந்த அல்லது போதுமான காரணமில்லாமல், எந்தக் கட்டடக்காரரும், வாடகைக்காரர் அடைந்துவரும் வசதிகளில் எதையும் நிறுத்தவும், தடுக்கவும் கூடாது.

(2) கட்டடக்காரர் இதற்கு மாறாக நடந்தால் வாடகைக்காரர் கண்ட்ரோலரிடம் இதைப்பற்றிப் புகார் மனுக் கொடுக்கலாம்.

(2 A) தம்மைக் கட்டடத்தை விட்டுக் காலி செய்யும்படி செய்யவோ, வாடகையை உயர்த்தவோ இவ்விதம் கட்டடக்காரர் வசதிகளை நிறுத்தி விட்டதாக வாடகைக்காரர் சொல்வதிலிருந்து தோன்றினால், கண்ட்ரோலர் உடனேயே, கட்டடக்காரருக்கு யாதொரு நோட்டீசும் அனுப்பாமலேயே, அவ்வசதிகளை அவர் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று அவருக்கு ஓர் தாற்காலிக உத்தரவு போடலாம்.

(3) கண்ட்ரோலர் விசாரணை செய்து, வாடகைக்காரர் அடைந்துவந்த வசதிகளைக் கட்டடக்காரர் காரணமின்றி நிறுத்தி விட்டதாகத் தீர்மானித்தால், அவர் அவ்வசதிகளைத் திருப்பக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிடவேண்டும்.

(4) வாடகைக்காரர் இவ்விதம் புகார் செய்தது வேண்டுமென்றே கட்டடக்காரருக்குத் தொல்லையுண்டாக்கவே செய்ததாகக் கண்ட்ரோலருக்குத் தோன்றினால், மனுச்செய்தவர் கட்டடக்காரருக்கு ரூ. 50க்கு மேற்படாத தொகையை நஷ்டஈடாகக் கொடுக்கவேண்டுமென்று உத்தரவிடலாம். கட்டடக்காரர் வேண்டுமென்று வாடகைக்காரருக்குத் தொல்லையுண்டாக்கவே வசதிகளை நிறுத்தி விட்டதாகக் கண்ட்ரோலருக்குத் தோன்றினால், கட்டடக்காரர் மனுதாரருக்கு ரூ. 50க்கு மேற்படாத தொகையை நஷ்ட ஈடாகக் கொடுக்கவேண்டுமென்று உத்தரவிடலாம்.

செக்ஷன் 9. நிறைவேற்ற மனு

(1) இச்சட்டத்தின் செக்ஷன் 7 அல்லது செக்ஷன் 8 இன்படி ஏற்பட்ட (கண்ட்ரோல

ருடைய) உத்தரவுகளையும்; செக்ஷன் 12இன் படி ஏற்பட்ட அப்பீல் கோர்ட்டின் உத்தரவுகளையும்; செக்ஷன் 12 Bயின் படி (ஹைகோர்ட் அல்லது ஜில்லா கோர்ட்டுகளால் ரிவிஷனில்) ஏற்பட்ட உத்தரவுகளையும் நிறைவேற்ற கீழ்க்கண்ட கோர்ட்டுகளில் மனுக்கொடுக்கவேண்டும். அதாவது:—சென்னைப்பட்டணத்தில் சிடி சிவில் கோர்ட்டின் பிரதான ஜட்ஜிடமும் அக்கோர்ட்டின் விடுமுறையின்போது ஸ்மால்காஸ் கோர்ட் விடுமுறை ஜட்ஜிடமும் நிறைவேற்று மனுக்கொடுக்கவேண்டும். மற்ற இடங்களில் கட்டடம் எங்கே இருக்கிறதோ அந்த இடத்திற்கான ஜில்லா முன்சிப்பிடம் நிறை வேற்று மனுக் கொடுக்கவேண்டும். ஒரு முன்சிப்புக்கு அதிகமாக இருந்தால் பிரதான டிஸ்டிரிக்ட் முன்சிபிடமும், ஜில்லா முன்சிப்பே இல்லாவிட்டால் சப்ஜட்ஜிடமும் (ஒன்றுக்கு மேற்பட்ட சப்ஜட்ஜுகள் இருந்தால் பிரதான சப்ஜட்ஜிடமும்) முன்சிப், சப்ஜட்ஜ் இரு கோர்ட்டுகளும் இல்லாத இடங்களில் அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள ஜில்லா ஜட்ஜிடமும் நிறைவேற்றுமனுக்கள் கொடுக்கப்படவேண்டும்.

நிறைவேற்று மனுக்களின் பேரில் ஏற்படும் உத்தரவுகளின் பேரில் அப்பீல் கிடையாது; ஆனால் செக்ஷன் 12 B யின் படி பரிசீலனை (Revision) மனுக்கொடுக்கலாம்.

செக்ஷன் 10. முடிவான வழக்குகளை மறுபடியும் விசாரிக்கக் கூடாது. இச்சட்டப்படிக்கோ, இதற்கு முன்பு அமுலில் இருந்த 1945 ஆம் வருடத்திய கண்ட்ரோல் உத்தரவுகளின்படியோ, 1946 ஆம் வருடத்திய சட்டப்படிக்கோ, 1949 ஆம் வருடத்திய அவசரச் சட்டப்படிக்கோ, புதுக்கோட்டை பங்கனப்பள்ளி இந்த இடங்களில் இச்சட்டம் அமுலிலிருப்பதாக வைத்துக்கொண்டு செய்யப்பட்ட உத்தரவுகளின்படியோ கட்டடக்காரர், வாடகைக்காரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளுக்கிடையே முடிவாகத் தீர்மானம் செய்யப்பட்ட அதே விஷயங்களைக் குறித்த மறுபடியும் கண்ட்ரோலருக்கு மனுப்போட்டால் அவைகள் உடனடியாகவே தள்ளப்படும்.

செக்ஷன் 10 A. கண்ட்ரோலர் பகிரங்கக் கோர்ட்டில் உத்தரவு பிறப்பிக்கவேண்டும். இச்சட்டப்படி கண்ட்ரோலர் செய்யும் ஒவ்வொரு உத்தரவும், பகிரங்கக் கோர்ட்டில் சொல்லப்படவேண்டும். விசாரணையின் கடைசி நாளிலோ, அல்லது இரு திரப்புக்கும் அறிவிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட தினத்திலோதான் கண்ட்ரோலர் மேற்கண்டபடி உத்திரவுகள் பிறப்பிக்கலாம்.

செக்ஷன் 11. கட்டடத்தின் உபயோகத்தை மாற்றுவது பற்றியும் 'ரிப்பேர்' பற்றியும். (1) கண்ட்ரோலருடைய எழுத்து மூலமான அனுமதியின்றி ஒரு வசிப்பதற்கான கட்டடத்தை (Residential Building) ஒரு வசிப்பதற்கல்லாத கட்டடமாக (Non-residential building) எவரும் மாற்றக்கூடாது.

(2) ஒரு கட்டடத்திற்கு அவசியமான பழுது பார்க்கும் வேலைகளை (Repairs)ச் செய்து தரவேண்டுமென்று வாடகைக்காரர் கட்டடக்காரருக்கு நோட்டீஸ் கொடுக்கலாம். நியாயமான ஒரு கெடுவுக்குள் கட்டடக்காரர் ரிப்பேர்களைச் செய்யத் தவறினால், வாடகைக்காரர் கண்ட்ரோலருக்கு மனுப்போட்டால், வாடகைக்காரரே அந்த ரிப்பேர்களைச் செய்துவிட்டு, அவர் கொடுக்க வேண்டிய வாடகைத் தொகையில் ரிப்பேர் செலவுகளை ஈடு செய்துகொள்ளும்படி கண்ட்ரோலர் உத்தரவிடலாம். ஆனால் ஒரு வருடத்தில் வாடகைக்காரர் கொடுக்க வேண்டிய வாடகைத் தொகையில் 12-ல் 1 பங்குக்கு மேல் ரிப்பேர் செலவுக்காக ஈடு செய்து கொள்ளமுடியாது.

செக்ஷன் 12. அப்பீல், (1) கண்ட்ரோலருடைய உத்தரவுகளின் பேரில் எந்த எந்த இடங்களில் எந்த எந்த அதிகாரிக்கு அப்பீல் செய்யலாமென்று குறிப்பிட ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரமுண்டு. கண்ட்ரோலருடைய உத்தரவு ஏற்பட்ட 15 நாட்களுக்குள் அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள அப்பீல் கோர்ட்டுக்கு அவ்வுத்தரவின் பேரில் அப்பீல் செய்யலாம். 15 நாட்கள் கணக்குச் செய்வதில்,

கண்ட்ரோலருடைய உத்தரவின் அதிகார பூர்வமான நகல் வாங்க அவசியம் தேவையாக இருந்த நாட்களை நீக்கி, கணக்குச் செய்ய வேண்டும்.

(2) அப்பீல் விசாரணை முடிந்து தீர்ப்பு ஏற்படும் வரை கண்ட்ரோலருடைய உத்தரவுகளை நிறைவேற்ருமல் நிறுத்தி வைக்க அப்பீல் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு.

(3) கண்ட்ரோலரிடமிருந்து தஸ்தவேஜூகளை வரவழைத்து, இருதரப்புக்கும் நோட்டீஸ் கொடுத்து அவர்கள் சட்சியைச் சொல்லிக் கொள்ளச் சந்தர்ப்பமளித்து, அவசியமானல் தாமே நேரிலோ, கண்ட்ரோலரைக்கொண்டோ, மேற்கொண்டும் விசாரணை நடத்தி, அப்பீல் ஜட்ஜ் தீர்ப்புச் சொல்ல வேண்டும். கட்டடத்தைக் காலிசெய்ய வேண்டுமென்ற கண்ட்ரோலர் செய்த உத்தரவை அப்பீல் கோர்ட்டில் உறுதி செய்தாலும் வாடகைக்காரர் கட்டடத்தைச் சுவாதீனம் கொடுக்க, வாடகைக் காரருக்கு மறுபடியும் அவகாசம் கொடுக்கலாம்.

(4) அப்பீல் கோர்ட்டின் உத்தரவும் அதற்குட்பட்டு, கண்ட்ரோலருடைய உத்தரவும் முடிவானவை. இச்சட்டத்தின் செக்ஷன் 12 B ன் படி ஹைகோர்ட்டு அல்லது ஜில்லாக் கோர்ட்டுக்கு அவ்வுத்தரவின் பேரில் 'ரிவிஷன்' மனுக் கொடுக்கலாமே ஒழிய, வேறு வகையில் எந்தக் கோர்ட்டிலும் அவ்வுத்தரவுகள் செல்ல மாட்டாவெனச் சொல்லமுடியாது.

செக்ஷன் 12 A. செலவுத் தொகை. இச்சட்டப்படி கண்ட்ரோலரிடமும் அப்பீல் கோர்ட்டிலும் நடக்கும் நடவடிக்கைகளில் யார், யாருக்கு, எந்தச் சொத்திலிருந்து எவ்வளவு செலவுத் தொகை, கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட, கண்ட்ரோலருக்கும், அப்பீல் கோர்ட்டுக்கும் அதிகாரம் உண்டு. இதற்காக ஏற்படும் விதிகளில் கண்ட நிபந்தனைகளை அனுசரித்து அவர்கள் செலவுத்தொகை போடலாம். செலவுத்தொகை சம்பந்தமாக, கண்ட்ரோலர் செய்யும் உத்தரவை மாற்றவும் ரத்துச்செய்யவும் அப்பீல் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு.

செக்ஷன் 12 B. 'ரிவிஷன்' அல்லது பரிசீலனை (1) இச்சட்டப்படி நிறைவேற்று மனுக்களின் பேரில் (செக்ஷன் 9ன் படி) ஏற்படும் உத்தரவுகளின் பேரிலும், அப்பீல் கோர்ட்டில் (செக்ஷன் 12ன் படி) ஏற்படும் உத்தரவுகளின் பேரிலும் பரிசீலனை 'ரிவிஷன்' மனுக் கொடுக்கலாம். சென்னைப் பட்டணத்தில் ஹைகோர்ட்டுக்கும், மற்ற இடங்களில் ஜில்லா கோர்ட்டுக்கும்தான் 'ரிவிஷன்' மனுக்கள் கொடுக்கலாம். அவ்வுத்தரவுகள் சட்டப்படிக்கும் முறைப்படிக்கும் நியாயமாகவும் ஏற்பட்டிருக்கிறதா என்று பரிசீலனை செய்து, யுக்தமான உத்தரவுகள் பிறப்பிக்க ஹைகோர்ட்டுக்கும், ஜில்லாக்கோர்ட்டுகளுக்கும் அதிகாரமுண்டு.

(2) ரிவிஷன் நடவடிக்கைகளிலும் செலவுத் தொகை போடலாம். சென்னை 1951ஆம் வருடத்திய ஜாகை-வாடகைக் கட்டுப்பாடு திருத்தச்சட்டம் அமுலுக்கு வந்த தேதிக்கு (1—5—1951க்கு) முன் உள்ள 6 மாதத்திற்குள் ஏற்பட்டிருக்கும் உத்தரவுகளையும் நடவடிக்கைகளையும் பற்றியும் இதன்படி ஹைகோர்ட்டுக்கும் ஜில்லா கோர்ட்டுகளுக்கும் ரிவிஷன் மனுக் கொடுக்கலாம்.

செக்ஷன் 12 C. உத்தரவுகள் உள் வாடகைக்காரர்களையும் கட்டுப்படுத்தும். ஒரு வாடகைக்காரர் கட்டடத்தைக் காலி செய்ய வேண்டுமென்று இச்சட்டப்படி ஏற்படும் உத்தரவுகள் அவருக்குள் இருக்கும் உள் வாடகைக்காரர்களையும் (Sub-tenants) கட்டுப்படுத்தும். அவர்கள் நடவடிக்கைகளில் கட்சிக்காரர்களாகச் சேர்க்கப்பட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும், அவர்கள் அவ்வுத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டவர்களே. ஆனல் மோசடியாகவோ ஒற்றுமைப்பட்டோ வாங்கப்பட்ட உத்தரவுகள் உள் வாடகைக்காரர்களைக் கட்டுப்படுத்தா.

செக்ஷன் 12 D. வார்சுகள். ஒரு மனு, அப்பீல் அல்லது மற்ற நடவடிக்கைகளில் கட்சிக்காரராக இருப்பவர் இறந்துபோனல், அவைகளை மேல்நடத்த அவர்களுடைய வார்சுகளுக்கு உரிமை உண்டு. மனு, அல்லது அப்பீல், அல்லது மற்ற நடவடிக்கைகளைத் தாக்கல் செய்ய வேண்டியவர் தாக்கல் செய்வதற்கு

முன்பே இரத்துபோய்விட்டாலும் அவைகளைத் தாக்கல் செய்ய அவர்களின் வார்சுகளுக்கு உரிமை உண்டு.

செக்ஷன் 12 E. கண்ட்ரோலர் முன்பு நடக்கும் நடவடிக்கைகளில் நேரில் வந்து சாட்சி சொல்லவோ, அவர்களிடம் இருக்கும் தஸ்தவேஜுகளைத் தாக்கல் செய்யவோ எந்தச் சர்க்கார் அல்லது ஸ்தலஸ்தாபன அதிகாரிக்கும் (Public Servants) கண்ட்ரோலர் சப்பீன் பிறப்பிக்கலாம்.

செக்ஷன் 13. விதிவிலக்குகள். இச் சட்டத்தின் எல்லா விதிகளிலிருந்தும் அல்லது எந்த விதியிலிருந்தும் எந்தக் கட்டடத்திற்கும் அல்லது எந்தவகைக் கட்டடங்களுக்கும் விதி விலக்கு அளிக்கச் சர்க்காருக்கு அதிகாரமுண்டு. அவ்வித விதிவிலக்குகள் சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்படவேண்டும்.

செக்ஷன் 14. கட்டட வரியைப்பற்றிய நகல்களை ஸ்தலஸ்தாபனங்களின் நிர்வாக அதிகாரிகள் கொடுக்கவேண்டியது. இச் சட்டத்தால் ஏற்படும் நடவடிக்கைகளில் தாக்கல் செய்வதற்காக முனிசிபாலிடி, சென்னைக் கார்ப்பரேஷன் அல்லது ஸ்தலஸ்தாபனங்களின் நிர்வாக அதிகாரிகளுக்கு பணம் போட்டு, வீட்டு வரி ரிஜிஸ்டரிலிருந்து தேவையான வருடங்களுக்கு என்ன வாடகை மதிப்பு பதிவு செய்யப்பட்டிருக்கிறதென்று காட்ட நகல்கள் வாங்கிக் கொள்ளலாம். அதற்காக விதிகளால் நிர்ணயம் செய்யப்படும் கட்டணங்களைக் கட்டி நகல் பெற்றுக் கொள்ளவேண்டும். இந் நகல்களை இச்சட்ட நடவடிக்கைகளில் தாக்கல் செய்யலாம்.

செக்ஷன் 15. கட்டடக்காரரும், வாடகைக்காரரும் கண்ட்ரோலருக்கு விவரங்கள் அனுப்பவேண்டும். இதற்காக ஏற்படும் விதிகளை அனுசரித்து ஒவ்வொரு கட்டடக்காரரும், வாடகைக்காரரும் கண்ட்ரோலருக்கோ, அவரிடம் அதிகாரம் பெற்றவருக்கோ அக்கட்டடத்தைப் பற்றிய விவரங்களை விதிகளின்படி அனுப்பவேண்டும்.

செக்ஷன் 16 குற்றங்களும். தண்டனைகளும்

(1) இச் சட்டத்தின் கீழ்க்கண்ட செக்ஷன்களில் கண்ட விதிகளை மீறுவது குற்றமாகும். மூன்று மாதம் வரை சாதாரண சிறைத் தண்டனை அல்லது ரூபாய் 2000 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

செக்ஷன் 3 (1). கட்டடம் காலியானதைத் தெரிவிக்காமலிருப்பது.

3 (2). வாடகைக்காரர் வேறு ஒருவரை வைத்து 3 மாதம் கழியும் திரும்பி வராமலும் காலியான நோட்டீஸ் கொடுக்காமலுமிருப்பது.

3 (4). கட்டடம் காலியாக இருப்பதை அதிகாரிக்குத் தெரிவித்த 10 தினங்களுக்குள் கட்டடத்தை வாடகைக்கு விடுவது, அல்லது கட்டடக்காரரே குடிவருவது.

3 (5). சர்க்கார் வாடகைக்கு எடுத்துக் கொண்ட கட்டடத்தை அதிகாரியிடம் சுவாதீனம் கொடுக்காமலிருப்பது பற்றியது.

3 (7). ஒரே ஊரில் இரண்டு அல்லது அதிக கட்டடங்களின் சொந்தக்காரர் இந்த விதியின்படி அதிகாரிக்கு நோட்டீசு கொடுக்காமலிருப்பது பற்றியது.

செக்ஷன் 6. (1) (a) நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்ட கட்டடங்களுக்கு வட்டம் (Premium) அல்லது அதிக வாடகை வாங்குவது கேட்பது பற்றியது.

(6) 2 (a) நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படாத கட்டடங்களுக்கு ஒப்பந்த வாடகையை விட அதிக வாடகை அல்லது வட்டம் வாங்குவது கேட்பது பற்றியது.

செக்ஷன் 8. (1) வாடகைக்காரர் அடைந்துவரும் வசதிகளைக் காரணமின்றி நிறுத்துவது பற்றியது.

செக்ஷன் 11. (1) வசிப்பதற்கான கட்டடத்தை வசிப்பதற்கல்லாத கட்டடமாக மாற்றுவது பற்றியது.

செக்ஷன் 15. கண்ட்ரோலருக்கு விதிகளின்படி விவரம் அனுப்பாமலிருப்பது பற்றியது.

மேற்கண்ட இச்சட்ட ஷரத்துக்களை மீறுவது குற்றம்.

(2) இதற்காக அதிகாரம் பெற்ற மாஜிஸ்ட்ரேட்டுகள் ரூ. 1000க்கு அதிகமாகவும் அபராதம் விதிக்கலாம். மேலும் இச்சட்டத்தை அனுசரித்து, சர்க்காரால் ஏற்படுத்தப்படும் விதிகளை மீறினாலும் அதற்குத் தண்டனை விதிக்க அவ்வித மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு அதிகாரம் உண்டு.

செக்ஷன் 17. விதிகள் செய்ய அதிகாரம்.

இச் சட்டத்தின் நோக்கங்களை அமுல் நடத்த தேவையான விதிகளை ராஜ்ய சர்க்கார் இயற்றலாம். குறிப்பாக அவ்வித விதிகள் இச் சட்டத்தில் "விதிகளின்படி" செய்ய வேண்டியதென்று சொல்லப்பட்ட விஷயங்களைப் பற்றியும்; கண்ட்ரோலர் அப்பீல் கோர்ட்டுகள் இவர்கள் பின்பற்ற வேண்டிய முறைகளைப் பற்றியும்; இச் சட்டத்தில் பிரஸ்தாபிக்கப்படும் நோட்டீசுகளையும் உத்தரவுகளையும் ஏற்படுத்துவது தெரிவிப்பது பற்றியும்; "எக்ஸ்பார்ட்டி" உத்தரவுகளை மாற்றுவது பற்றியும்; வாரசுகள் சேர்ப்பது பற்றியும்; அதற்குக் காலாவதி பற்றியும் இருக்கலாம். இச்சட்டப்படி ஏற்படுத்தப்படும் விதிகளில், அவ்விதிகளை மீறுகிறவர்களுக்கு ரூபாய் 2000 வரை அபராதம் விதிக்கப்படலாமென்றும் அவ்விதிகள் இருக்கலாம்.

இச்சட்டத்தை அனுசரித்த ஏற்படும் விதிகள் சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும். கெஜட்டில் பிரசுரமானவுடன் அவை அமுலுக்கு வரும்.

செக்ஷன் 18. பழைய சட்டத்தின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

(1) இச் சட்டம் (அதாவது 1949ஆம் வருடத்திய 25ஆவது சட்டம்) அமுலுக்கு வரும் போது (அதாவது 14—12—1949ல்) கீழ்க்கண்ட சட்டங்களின் படி எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் முடிவடையாமல் "பெண்டிங்கில்" இருந்தால், அவை இச் சட்டத்தின் படி எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகப் பாவிக்கப்பட்டு, இச் சட்டத்தின் ஷரத்துக்களை அனுசரித்தே முடிவு செய்யப்பட வேண்டும். அதாவது (1) 1945ஆம் வருடத்திய சென்னை ஜாகை—வாடகை கட்டுப்பாடு உத்தரவு; 1945-ம் வருடத்திய ஜாகைக் கல்லாத சட்டட வாடகைக் கட்டுப்பாடு உத்தரவு. (2) 1946ஆம் வருடத்திய சென்னைக் கட்டட ஜாகை - வாடகைக் கட்டுப்பாடு சட்டம்; 1-10-1948க்குப் பின் இச் சட்டம் அமுலிலிருப்பதாகப் பாவித்துச் செய்யப்பட்ட நடவடிக்கைகள். (3) டை சட்டம் புதுக்கோட்டை, பங்கனப்பள்ளிக்கு விஸ்தரிக்கப்பட்டது சரி என்று வைத்துக்கொண்டு எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள். (4) 1949ஆம் வருடத்திய சென்னைக் கட்டட ஜாகை-வாடகை அவசரச் சட்டம் (Ordinance).

(2) மேற்கண்ட சட்டங்களின் கீழ் ஏற்பட்டு முடிவடைந்த உத்தரவுகளும், அச்சட்டங்களின்படி நிர்ணயம் செய்யப்பட்ட "நியாய வாடகை" சம்பந்தமான உத்தரவுகளும், இச் சட்டத்தை அனுசரித்து இதில் கண்ட அதிகாரிகளால் மாற்றப்பட்டாலொழிய அதுவரை அவ்வுத்தரவுகள் எல்லாம் செல்லும்.

செக்ஷன் 19. இச் சட்டம் அமுல் இழந்தாலும்.

இச் சட்டம் அமுல் இழந்தாலும் (அதாவது செக்ஷன் 1-ல் இச்சட்டம் 30-9-1951 முடியத்தான் அமுலில் இருக்கும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது) (a) இச் சட்டம் அமுலில் இருக்கும்போது வசூல் செய்ய முடியாத தொகைகளைப் பின்பும் வசூல் செய்ய முடியாது; குடியிருப்பவர் இச்சட்டப்படி திருப்பி வாங்கக்கூடிய தொகைகளைப் பின்பும் திருப்பி வாங்கலாம். (b) இச் சட்டத்தை மீறுவதால் ஏற்படக்கூடிய அபராதம் அல்லது தண்டனை இச் சட்டம் அமுல் இழந்த பின்பும் வற்புறுத்தப்படலாம். (c) அது சம்பந்தமான நடவடிக்கைகள் இச்சட்டம் அமுல் இழந்த பிறகும் எடுத்துக் கொள்ளப்பட்டு தண்டனை அல்லது அபராதம் விதிக்கவும் படலாம்.

செக்ஷன் 20. விதிவிலக்கும், நடவடிக்கைகளைச் சட்ட பூர்வமாக்குவதும்.

1946ஆம் வருடத்திய சென்னை ஜாகை வாடகைக் கட்டுப்பாடு சட்டப்படிக்கோ, அச் சட்டம் 1-10-1948க்குப் பின்பும் அமுலில்

இருந்ததாக வைத்துக் கொண்டோ, அச்சட்டம் புதுக்கோட்டை, பங்கனப்பள்ளி இந்த இடங்களில் அமுலில் இருந்ததாக வைத்துக் கொண்டோ, அல்லது 1949ஆம் வருடத்திய அவசரச் சட்டப்படிக்கோ - ஏற்படுத்தப்பட்ட விதிகளும், உத்தரவுகளும், தீர்ப்புகளும், சர்க்கார் அறிக்கைகளும், நடவடிக்கைகளும், எவ்விதமான செய்கைகளும், திருத்தங்களும் இச் சட்டப்படி செய்யப்பட்டவைகளாகவே பாவிக்கப்படும். மேற்கண்ட சட்டங்களின்படி விதிக்கப்பட்ட அபராதங்களும், தண்டனைகளும், ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகளும், கிரிமினல் வழக்குகளும் இச் சட்டத்தை அனுசரித்துச் செய்யப்பட்டவையாகவே பாவிக்கப்படும்.

செக்ஷன் 21. 1946ஆம் வருடச் சட்டப்படி செய்யப்பட்ட செய்கைகளுக்குப் பாதுகாப்பு.

(1) 1946ஆம் வருடத்திய சட்டப்படிக்கோ, அது புதுக்கோட்டை, பங்கனப்பள்ளிக்கும் அமுல் உண்டென்றோ நினைத்துக்கொண்டு அதன்படி நடவடிக்கைகள் எடுத்துக் கொண்ட அதிகாரிகள் மீதோ, தண்டனை அல்லது அபராதம் விதித்த அதிகாரிகள் மீதோ தீர்ப்புகள் அளித்த அதிகாரிகள் மீதோ, அவ்வித தண்டனைகளையும் உத்தரவுகளையும் நடை முறையில் நிறைவேற்றிய அதிகாரிகள் மீதோ எந்தக் கோர்ட்டிலும் எவ்வித சிவில் அல்லது கிரிமினல் வழக்கும் எவரும் தொடர முடியாது. (2) ராஜ்ய சர்க்கார் மீதும் அவர்கள் மேற்கண்ட சட்டங்களின்படி செய்த எக் காரியத்திற்கும், எவ்விதமான தாவாவும் நடவடிக்கையும் எவரும் எடுத்துக்கொள்ள முடியாது. (3) மேற்கண்ட சட்டம் குறிப்பிட்ட காலத்திற்குப் பின் செல்லாதென்று ஏற்பட்டாலும், புதுக்கோட்டை, பங்கனப்பள்ளிக்கு விஸ்தரிக்கப்பட்டது செல்லாதென்று ஏற்பட்டாலும் மேலே சொல்லப்பட்ட பாதுகாப்புகள் உண்டு.

செக்ஷன் 22. ரத்துச் செய்யப்பட்ட சட்டங்கள்.

1946ஆம் வருடத்திய சென்னைக் கட்டட ஜாகை-வாடகைக் கட்டுப்பாடு சட்டம்; 1949ஆம் வருடத்திய சென்னைக் கட்டட ஜாகை-வாடகை அவசரச் சட்டம்; 1946ஆம் வருடச் சட்டம் புதுக்கோட்டை, பங்கனப்பள்ளிக்கு விஸ்தரிப்பு உத்தரவு இவைகள் இச் சட்டத்தின் மூலம் ரத்துச் செய்யப்பட்டன.

[குறிப்பு:—புதுக்கோட்டை பங்கனப்பள்ளி உள்பட சென்னை ராஜ்யத்தில் இச் சட்டத்தின் செக்ஷன் 1ல் குறிப்பிடப்பட்டிருக்கும் இடங்களில் இச்சட்டம் இப்பொழுது அமுலில் இருக்கிறது.]

1951-ம் வருடத்திய திருத்தச் சட்டத்தின் விசேஷ ஷரத்துக்கள் "பெண்டிங்" நடவடிக்கைகள்.

இத் திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 1-5-1951ல் சப் ஜட்ஜுகளிடமும் ஜில்லா ஜட்ஜுகளிடமும் கொடுக்கப்பட்டு, "பெண்டிங்கில்" இருக்கும் நிறைவேற்று மனுக்களை அவர்கள், யுக்தமென்று நினைத்தால், இத் திருத்தச் சட்டத்தால் நிறைவேற்று மனுக்களை ஏற்றுக்கொள்ள அதிகாரமுடைய டிஸ்டிரிக்ட் முன்சீப்புகளுக்கு மாற்றிவிடலாம். டிஸ்டிரிக்ட் முன்சீப்புகள் அம்மனுக்களின் மீது உத்தரவுகள் செய்யவேண்டும்.

மேலும் முடிவடையாமல் "பெண்டிங்"கில் இருக்கும் மனுக்களும் அப்பீல்களும் மற்ற நடவடிக்கைகளும் இத் திருத்தச் சட்டத்தின் ஷரத்துக்களை அனுசரித்து முடிவு செய்யப்படும்.

[குறிப்பு:—இத்துடன் புதிய திருத்தங்கள் உள்பட பொருத்தப்பட்ட ஜாகை—வாடகைக் கட்டுப்பாடு சட்டம் (1949) ஜாடாவும் முடிவுற்றது. அடுத்தவரும் இதழ்களில் இச் சட்டத்தை அனுசரித்துச் சர்க்காரால் செய்யப்பட்டிருக்கும் விதிகளும், இச் சட்டம் சர்க்காரால் விஸ்தரிக்கப்பட்டிருக்கும் இடங்களின் விவரமும் கொடுக்கப்படும்.]

கேள்வியும் பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த **விவகாரங்களைப்பற்றி** எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் **அபிப்பிராயமே.**

கேள்விகளுக்கு நேரில் பதில் கிடைக்க: "வக்கீல்" பத்திரிகையில் மேற்கண்டபடி வரிசைக்கிரமமாய்ப் பதில் வெளிவரும் முன்பே பிரத்தியேகமாகத் தபால் மூலம் நேராகப் பதில் கேட்கும் நேயர்கள் கேள்வி அடங்கிய தாளை **ரிஜிஸ்டர் தபால் மூலம்** காரியாலயத்திற்கு அனுப்புவதுடன் அத்துடன் தமது விலாசம் எழுதப்பட்ட கவர் ஒன்றும், **ரூபாய் மூன்று** தபால் ஸ்டாம்பும் சேர்த்து அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் தனித்தனி ஸ்டாம்பு அனுப்பவேண்டும். பிரத்தியேக பதில் அனுப்பப்படும்.

64. **கேள்வி:** (கிருஷ்ணன் - அம்பாசமுத்திரம்) பதிவுத் திருமணம் செய்து கொள்ள ஆணுக்கும் பெண்ணுக்கும் எத்தனை வயது பூர்த்தியாகவேண்டும். பதிவுத் திருமணம் செய்து கொண்ட திம்பதிகளை பெற்றோர்கள் நினைத்தால் பிரிக்கமுடியுமா?

பதில்: ஆணுக்கு 18 வயதும், பெண்ணுக்கு 15 வயதும் பூர்த்தியாகவேண்டும். இருந்தும், 21 வயது பூர்த்தி ஆகாமல் இருப்பவர் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் தம் தகப்பன் அல்லது கார்டியனுடைய சம்மதம் பெற்றுத்தான் பதிவுத் திருமணம் (ரிஜிஸ்டர் மாரியேஜ்) செய்துகொள்ள முடியும். பதிவுத் திருமணம் செய்து கொள்பவர் பிரிபடாத ஒரு இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தால், பதிவுத் திருமணம் செய்துகொண்ட உடனேயே அவர் குடும்பத்தை விட்டுப் பிரிந்தவராக சட்டத்தாலேயே பாவிக்கப்படுவார். (ஸ்பெஷல் மாரியேஜ் ஆக்ட் 1872—செக்ஷன் 22) இதைத் தவிர வேறு வகையில், பதிவுத்திருமணம் செய்து கொண்டவர்களைப் பெற்றோர்கள், பிரிக்க முடியாது.

65. **கேள்வி:** (சீனுவாச முதலியார்-இராயவேலூர்) சென்னை ராஜ்யத்திலிருந்து கீழ்கண்ட ஊர்களுக்கு அனுப்பும் சரக்குகளின் விற்பனைத் தொகைக்கு அவைகளை விற்கும் வியாபாரி விற்பனை வரி போட்டு வசூல் செய்யலாமா? அதாவது கொழும்பு, புதுச்சேரி, கொச்சி, திருச்சூர், எர்ணாகுளம், பெங்களூர், மைசூர் இந்த இடங்களுக்கு.

பதில்: 1—4—1951 முதல் சென்னை ராஜ்யத்திலிருக்கும் வியாபாரி வெளி ராஜ்யங்களுடன் செய்யும் வியாபாரத்துக்கு (Inter-State trade) விற்பனைவரி கொடுக்கவேண்டியதில்லை. இது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 286 (2) ன் படி. ஆனால் இவ்விதம் வரி இல்லாத வியாபாரத்திற்குத் தனிக் கணக்கு முதலிய வைத்துக்கொண்டால் தான் விற்பனை வரிச் சட்டப்படி இத்தொகை 'மொத்தவியாபாரத்தொகை' (Turnover) யிலிருந்து கழித்துக்கொள்ளப்படும். மேலும் ஒரு வியாபாரி அவ்வித வெளிராஜ்ய வியாபாரத்திற்கு விற்பனை வரி வசூல் செய்திருந்தால்

அதை விற்பனை வரிச் சட்டப்படி சர்க்காரிடம் கொடுத்து விட வேண்டும்.

66. **கேள்வி:** (தருமு-பில்லாலி) ஜீவ பலித் தடைச் சட்டம் அமுலில் வந்து, இன்னும் கிராமங்களுக்குத் தெரியவில்லை. கிராமங்களில் ஜீவ பலி நேர்ந்தால் எந்த அதிகாரிக்கு எந்த முறையில் தெரிவிக்கலாம். பூசாரியாய் இருப்பவர்கள் தற்காப்புக்கான வழி எப்படி செய்து கொள்ளலாம்?

பதில்: சென்னை ஜீவபலித் தடைச் சட்டம் 1—6—1951 ல் சென்னை ராஜ்யம் முழுவதிலும் அமுலுக்கு வந்து விட்டது. எந்தச் சட்டத்தை மீறியவர்கள் மீதும் வழக்கு தொடரப்பட்டால் "எனக்கு அச்சட்டம் தெரியாது" என்று எவரும் கட்சி சொல்ல முடியாது. அவ்வித கட்சியை எந்தக் கோர்ட்டும் கேட்கக் கூடாது என்பது தான் சட்டம். 1—6—1951 க்குப் பின் ஜீவபலித் தடைச் சட்டம் மீறப் பட்டால், போலீசுக்குத் தெரிவிக்கலாம்; கிராம அதிகாரிக்கும் தெரிவிக்கலாம். பூசாரிகள், தங்கள் தங்கள் கோயில்களில் எவருக்கும் பலியிட இடங்கொடுக்காமலிருப்பதுதான் தற்காப்பு வழி. (குறிப்பு:—சென்னை ஜீவபலித்தடைச் சட்டம் 1951 "வக்கீல்" பிப்ரவரி இதழில் விபரமாய் விளக்கப்பட்டிருக்கிறது.)

67. **கேள்வி:** (குஞ்சிதபாதம்-பொறையார்) ஒரு நபரை இப்பொழுதுள்ள ஜீவாதார உரிமைப்படி அம்மை குத்திக்கொள்ள சர்க்கார் கட்டாயப்படுத்தி, அதற்கு அவர் மறுத்தால், தண்டனைக் குள்ளாவாரா?

பதில்: உள்ளாவார்.

68. **கேள்வி:** (சீனி செட்டியார்—புளியங்குடி) கிராம பஞ்சாயத்துக் கோர்ட் டிக்ரியை நிறை வேற்ற காலாவதி எத்தனை வருடம்? சிவில் கோர்ட் டிக்ரிகளை மூன்று வருடத்திற்கு ஒருதரம் நிறைவேற்றி 12 வருட முடிவில் டிக்ரி அமுல் இழந்து விடும் என்ற சட்டம் பஞ்சாயத்து கோர்ட் டிக்ரிகளுக்கும் உண்டா?

187209

பதில்: டிக்ரியை 3 வருடங்களுக்குள் ஒரு தரம் நிறைவேற்றினால்தான் உயிர் இருக்கும் என்ற காலாவதிச சட்ட விதி பஞ்சாயத்து கோர்ட் டிக்ரிகளுக்கும் உண்டு. (சென்னை வில்லேஜ் கோர்ட் ஆக்ட் செக்ஷன் 20) ஆனால் 12 வருட முடிவில் டிக்ரி அமுல் இழந்து விடும் என்ற சிவில் வழக்கு முறைச் சட்டவிதி பஞ்சாயத்து கோர்ட் டிக்ரிகளுக்கு இல்லை.

69. **கேள்வி:** (மாணிக்கம் செட்டியார் கிரமங்கலம்) சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி "ஓபன் பேமெண்ட்" என்பது எந்த வருடத்திற்கு முன் கட்டுப் படுத்தும்?

பதில்: அசல் வட்டி இரண்டும் கொடுக்கப் படவேண்டிய ஒரு கடனுக்காக, கடன் வாங்கியவர், பொதுவாக ஒரு தொகையைத் திருப்பிக் கொடுத்தால், (அதாவது அவர் திருப்பிக் கொடுக்கும் தொகை வட்டிக்காகக் கொடுக்கப் படுகிறதா, அல்லது அசலுக்காகக் கொடுக்கப் படுகின்றதா, என்று குறிப்பிடாமல் கொடுத்தால்) அதற்கு ஆங்கிலத்தில் "ஓபன் பேமெண்ட்" (Open Payment) 'பொது வரவு' என்று சொல்வது. சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தில் 1-10-1932 க்கு முன் வாங்கப்பட்ட கடனைப் பற்றிய செக்ஷன் 8 ல் ஒரு விவரணம் சேர்க்கப்பட்டது. அதாவது:-"இந்த செக்ஷன்படி கடன் வாங்கிய ஒருவர் திருப்பிக்கொடுக்க வேண்டிய தொகை எவ்வளவு என்று கணக்கு செய்யும் போது, அவர் எழுத்து மூலம் வட்டிக்குக் கொடுக்கப் பட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கும் தொகைகள் தவிர, பாக்கி அவர் கொடுத்திருக்கும் எல்லாத் தொகைகளும் அசல் தொகையில் தான் கழித்துக் கொள்ளப் படவேண்டும்" என்று 1948 ஆம் வருடத்திய 23 ஆவது சென்னை திருத்தச் சட்டத்தால் சேர்க்கப்பட்டது. இத் திருத்தச் சட்டம் 25—1—1949 ல் கெஜட் பிரசுரம் செய்யப்பட்டது.

—

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUBUVANAM, TIRUVIDAIMARUDUR AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, THE SOUTHERN BOOK HOUSE LTD. Editor:—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.

கல்யாண
பட்டு நூல்
ஜவுளிகளுக்கு

★

ராதா ஸில்க்
எம்போரியம்

★

119, பெரியதெரு, :: கும்பகோணம்.
போன் நெ. 83

கல்யாண காலத்துக்கேற்ற
ஜரிகை கலந்த
பட்டுச் சேலைகள் &
நூல் ஜவுளிகள்
உங்கள் மனதிற்கு உகந்த
தினுசுகள் கிடைக்குமிடம்

கொள்ளேகால்
ஸில்க் ஹவுஸ்

பெரிய தெரு, :: கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1942 | தந்தி "லலிதாலய"

உயர்தர ஆயுர்வேத சிகித்ஸைக்கும்
மருந்துக்கும்

லலிதா பார்மஸி
ஆயுர்வேத வைத்தியசாலை
கும்பகோணம்.

ஹெட் ஆபீஸ்
49, மூர்த்தி செட்டித் தெரு.

பிராஞ்சு
73, பக்தபுரி அக்ரஹாரம்.

விசேஷ தயாரிப்பு
நரம்பு தளர்ச்சிக்கு "யௌவநீ"

ஆடைகளை அழகு பெறச் செய்வது!

அன்னகிளி
சோப்

தயாரிப்பவர்:—

சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்
P. B. No. 38
தஞ்சாவூர்.

"வக்கீல்"
(விளம்பர விகிதம்)

ஒரு முறை பிரசுரம் செய்ய

பின் அட்டை முழுப்பக்கம் (இரண்டு கலர்)	ரூ. 100
உள் அட்டை முழுப்பக்கம்	ரூ. 80
உள் பக்கம் முழுப்பக்கம்	ரூ. 60
ஷை ... அரைப் பக்கம்	ரூ. 35
ஷை ... கால் பக்கம்	ரூ. 20
ஒரு காலம் - அங்குலம்	ரூ. 5

(தொடர்ச்சியாய் 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

Regd. No. M. 5399

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

REGISTERED TRADE MARK

பிராஞ்சு: (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத்தைலம்,
கோகுல் கூந்தல் தைலம்

வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

SOLE AGENTS: —

For Madras
SURAJ AGENCIES
MADRAS

For Coimbatore, Palghat & Nilgiris
B. BALAPATTABI CHETTIAR.
246, VYSYAL STREET, COIMBATORE.

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, TIRUBUVANAM, TDR